# அத்தியாயம் 4

# விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

## 4.1 பொதுநோக்கு

**கேள்வித் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணய வழிமுறைகளுக்கு மத்தியிலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் ஆகிய இரண்டினதும் காரணமாக விலைகளிலான பொதுவான விருத்திகள் 2007இலும் தொடர்ந்து சாதகமற்று விளங்கின.** புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (கொநுவிசு(பு)) அளவிடப்பட்டவாறு, பொது விலைமட்டம் மேல் நோக்கிய போக்கில் அசைந்து, 2006இன் 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2007இல் 15.8 சதவீதம்கொண்ட ஆண்டுச்சராசரி அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றது. இப்பாதகமான விருத்தி உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலிருந்தும் உருவான பல காரணிகளின் இணைந்த விளைவாக ஏற்பட்டதாகும். உள்நாட்டைப் பொறுத்தமட்டில், வடக்கு மற்றும் கிழக்கில் நெல் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பிரதேசங்களில் பயங்கரவாத குழப்பங்கள் இருந்தமை, மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் உயர் கோதுமை விலைகளிலிருந்து எழுந்த பதிலீட்டு விளைவு காரணமாக அரிசிக்கான உயர் கேள்வி என்பன உள்நாட்டு அரிசி விலையில் மோசமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. வழங்கல் பற்றாக்குறைகள் மற்றும் உயர் விநியோகச் செலவும் உள்நாட்டு வேளாண்மைப் பொருட்களின் விலைகளை உயர்த்தின. வெளிநாட்டுப் பக்கத்தில், தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலை மற்றும் வாயு விலைகள், இவ்வாண்டில் பல தடவைகளில் இப்பொருட்களின் உள்நாட்டு விலைகளின் மேல்நோக்கிய சீராக்கங்களுக்கு இட்டுச் சென்றதுடன் நுகர்வுப் பொருட்களின் விலைகளில் வேறுபட்ட அளவுகளில் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்தின. இதற்குச் சமமாக, உலக வழங்கல் பற்றாக்குறைகள் மற்றும் அதிகரித்த கேள்வி ஆகிய இரண்டுடன் இணைந்து பன்னாட்டுப் பொருட்கள் சந்தையின் மோசமான விருத்திகள் கோதுமை மற்றும் பால் உணவுகள் போன்ற இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உணவுப் பொருட்களின் விலைகளை குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியளவில் உயர்த்தின. இவ்வாண்டில் ஏற்பட்ட உண்மைக்கூலி அதிகரிப்புக்களும் விலைகள் மீது ஓரளவு அழுத்தத்தை ஏற்படுத்தின. வெளிநாட்டு நிகழ்வுகளும், நிரம்பல் அதிர்வுகளும் விலைகள் மீது கடுமையான தாக்கத்தினை




ஏற்படுத்திய போதும் கேள்வி அழுத்தம், இறுக்கமான நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலின் மூலம் குறிப்பிடத்தக்களவிற்கு கட்டுப்படுத்தப்பட்டது.

**அரசதுறை, முறைசார் தனியார்துறை மற்றும் முறைசாராத் தனியார்துறை ஆகிய சகல மூன்று துறைகளினதும் பெயரளவுக் கூலிகள் 2007 இல் அதிகரித்தன.** அரசதுறை ஊழியர்களின் உண்மைக் கூலி அதிகரிப்புக்கள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை பதிவு செய்திருக்கையில் முறைசார் தனியார்துறையின் உண்மைக் கூலி அதிகரிப்புக்கள் 2006இல் ஏற்பட்ட உண்மைக் கூலி இழப்புடன் ஒப்பிடுகையில் 2007இல் அதிகரிப்பைப் பதிவு செய்தன. அரசதுறை ஊழியர்களின் கூலிகளின் அதிகரிப்பு, கடந்த ஆண்டில் சம்பள மீளாய்வுகளின் எஞ்சிய 50 சதவீத கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுப் படியின் மேல் நோக்கிய சீராக்கம் என்பனவற்றால் ஏற்பட்டது. கூலி நிர்ணயச்சபை வர்த்தகங்களின் ஆளுகைக்குட்பட்ட மாதாந்த சம்பளத்தைச் சம்பாதிக்கும் சகல தொழிலாளர்களுக்குமான ஆகக் குறைந்த கூலியில் மேல் நோக்கிய மீளாய்வு, முறைசார் தனியார்துறையின் கூலி வீதச் சுட்டெண்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. எனினும், முறைசார் தனியார் துறையினரின் கூலிகள் விலை மட்டத்திலான அதிகரிப்பை ஈடுசெய்யப் போதுமான அளவுக்கு அதிகரிக்காமையால், அவர்கள் உண்மைக்கூலி இழப்புக்களுக்குள்ளானார்கள்.

**தொழில் வாய்ப்பின்மை வீதம் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்ததுடன், 2007இல் முன்னெப்பொழுதுமில்லாத ஆகக் குறைந்த வருடாந்த வீதமான 6.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் காலாண்டு தொழில்வாய்ப்பின்மை வீதமும் 2007இன் நான்காம் காலாண்டில் முன்னெப்பொழுதுமில்லாத ஆகக்குறைந்த வீதமான 5.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** தனியாள் பணிகள்,கட்டடவாக்கம், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறைகளில் இவ்வாண்டில் அதிகரித்த தொழில்நிலை வாய்ப்புக்கள் காணப்பட்டன. எனினும், குறிப்பாக நெல்லை உள்ளடக்கிய வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட பின்னடைவு வேளாண்மைத் தொழில் நிலையில் வீழ்ச்சியொன்றை ஏற்படுத்தியது. இதேவேளை, உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் குறிப்பாக இளைஞர்களுக்கான கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியதுடன், தொழிலின்மையைக் குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்தது. இதேவேளை, குறிப்பாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் அண்மைய ஆண்டுகளில் தொழிலாளர் உற்பத்தித்திறனிலான மேம்பாடு உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு பங்களிப்புச் செய்தது. இதே வேளை, மொத்தத் தொழில்புரிவோரில் ஏறக்குறைய 18 சதவீதத்துக்கு வகைகூறும் வெளிநாட்டு தொழிற் சந்தையின் மேம்பாடு 2007இல் தொழிலின்மையைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது.

வரைபடம் 4.1 புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்




## 4.2 விலைகள்

### விலை அசைவுகளுக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள்

**உள்நாடு அதுபோல் வெளிநாட்டுக் கேள்வி மற்றும் வழங்கல் காரணிகளின் இணைந்த விளைவாக ஏற்பட்ட விலை அழுத்தத்தின் திரட்சி காரணமாக பொது விலை மட்டம் 2006 உடன் ஒப்பிடுகையில் 2007 இல் அதிகரித்தது.** இது 15.8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த கொநுவி சுட்டெண்ணின் (பு) ஆண்டுச் சராசரி மாற்றத்தால் பிரதிபலிக்கப்பட்டது. 2006 நவெம்பரில் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளைத் தொடர்ந்து 2007 சனவரியில் அரசதுறை ஊழியர்களின் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, அதிகரித்த கேள்வியினூடாக நுகர்வோர் விலைகள் மீது ஓரளவு அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனினும், 2007இல் கடுமையான இலக்குகளினுள் ஒதுக்குப் பணத்தை வைத்திருந்ததன் மூலம் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை இவ்வாண்டில் கேள்வி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தியது.

**உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் இரண்டிலும் காணப்பட்ட வழங்கல் பற்றாக்குறைகள் 2007இல் உணவுப் பொருட்களில் உயர் விலைகளை ஏற்படுத்தின.** இது வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மோசமான பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளால் ஏற்பட்ட உயர் போக்குவரத்துச் செலவு என்பவற்றின் காரணமாக பொருட்களைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட இடையூறுகளால் மோசமடைந்தது. இத்துடன், ஆசியப் பொருளாதாரங்களின் உயர் வளர்ச்சியால் உருவாக்கப்பட்ட அதிகரித்த கேள்வியால் உந்தப்பட்ட வேளாண்மைப் பொருட்களின் உயர் விலைகள் மற்றும் மோசமான வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட குறைந்த வழங்கல் என்பன காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்தன. எனினும், இவ்வாண்டில் காலத்துக்குக்காலம் பத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை உறுதியாக வைத்திருப்பதற்கான அரசின் நிகழ்ச்சித் திட்டம், உணவு விலைகள் மீதான அழுத்தத்தை ஓரளவிற்குக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்தது.

**அட்டவணை 4.1** — **விலைச் சுட்டெண்களில் மாற்றங்கள்**

| சுட்டெண் | சராசரிச் சுட்டெண் 2005 | 2006 | 2007 (அ) | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் திசெ - 06/திசெ - 05 | திசெ - 07/திசெ - 06(அ) | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 2006/2005 | 2007/2006 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| கொழுவிசு (பு) | 128.0 | 140.8 | 163.1 | 13.5 | 18.8 | 10.0 | 15.8 |
| மொ.வி.சு | 2,105.9 | 2,351.5 | 2,924.4 | 17.3 | 32.1 | 11.7 | 24.4 |
| மொ.உ.உ.சுருக்கி | 202.1 | 224.9 | 256.3 | - | - | 11.3 | 14.0 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**அநேகமான உள்நாட்டு வேளாண்மைப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் 2006 உடன் ஒப்பிடுகையில் 2007இல் கூர்மையாக விளங்கின.** 2007இல் 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த நெல் உற்பத்தியின் பின்னடைவுக்கு இசைந்து செல்லும் வகையில், அரிசியின் விலை 2007 மேயிலிருந்து அதிகரித்துச் செல்லும் போக்கில் காணப்பட்டது. இத்துடன், குறிப்பாக இவ்வாண்டின் பிற்பகுதியில், பாண் மற்றும் கோதுமைமா என்பனவற்றின் உயர் விலைகளின் பதிலீட்டுத் தாக்கத்தால் ஏற்பட்ட அரிசிக்கான அதிகரித்த கேள்வியும் உயர்விலை மட்டங்கள் நீடித்து நிலைத்திருப்பதன் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக, 2007இல் அரிசியின் சில்லறை விலைகள் 18 - 35 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. மோசமான வானிலை நிலைமைகளால் மலை நாட்டுப் பிரதேசங்களில் ஏற்பட்ட மண் சரிவுகள் மற்றும் தென் பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உற்பத்தி செய்யப்படும் முக்கிய பிரதேசங்களிலிருந்தான குறைந்த வழங்கல்களால், இவ்வாண்டில் மரக்கறிகளின் சராசரி விலை அதிகரிப்புக்கள் கணிசமானளவில் விளங்கின. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2007இல் தெங்கு உற்பத்தியில் முன்னேற்றம் காணப்பட்டது. எனினும், இவ்வாண்டில் ஏனைய சமையல் எண்ணெய்கள் மீதான இறக்குமதித் தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பு தேங்காய் எண்ணெய் மீது கேள்வி அழுத்தத்தைக் கொண்டிருந்ததுடன், கூடியளவு உற்பத்தியை எண்ணெய் உற்பத்திக்கு மாற்றியது. இது, உள்நாட்டு நுகர்வுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள காய்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தி 2007இல் உள்நாட்டுச் சந்தையில் உயர் தேங்காய் விலைகளுக்கு இட்டுச் சென்றது. இதேவேளை, உயர் ஏற்றுமதி விலைகள் 2007இல் தெங்குக் கைத்தொழிலில் உள்ள தொழிலாளர்களின் கூலிகளை அதிகரிக்க உதவியது. அதனால், தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலைகள் முறையே 21 சதவீதம் மற்றும் 53 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இது போலவே, சுனாமிப் பேரழிவுக்குப் பின்பு மீன்பிடித்துறையின் முழுமையான மீட்சியுடன் மீன் உற்பத்தி 2007இல் 15.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த போதிலும் அதிகரித்த எரிபொருள் விலைகள், மீன் விலைகள் மீது மேல் நோக்கிய அழுத்தத்தைக் கொண்டிருந்தன.

**உயர்ந்த பன்னாட்டு விலைகள் காரணமாக முக்கிய இறக்குமதிப் பொருட்களின் விலைகள் கணிசமானளவில் அதிகரித்தன.** பெரும்பாலும் அவுத்திரேலியாவில் நிலவிய வரட்சி மற்றும் உலர் வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட குறைந்த வழங்கல் காரணமாக கோதுமைத் தானியம் மற்றும் பால்மாவின் உலக சந்தை விலைகள் இவ்வாண்டில் அதிகரித்தன. 2007இல் பால்மாவின் இறக்குமதி விலை ஐ.அ.டொலர் நியதிகளில் கிட்டத்தட்ட 20 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், கோதுமைத் தானியத்தின் விலை, சராசரியாக 47 சதவீதத்தால் அதிகரித்தது. ஏனைய முக்கிய உணவுப் பொருட்களில், பருப்பு (68 சதவீதம்) மற்றும் செத்தல் மிளகாய் (31 சதவீதம்) என்பவற்றின் இறக்குமதி விலைகளில்

**அட்டவணை 4.2** — **இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்**

| | விடயம் | அலகு | கொ.நு.வி.சு (பு) நிறை % | விலை - ரூபா: ஆண்டுச் சராசரி 2005 | 2006 | 2007 (அ) | திசெ. 2005 | திசெ. 2006 | திசெ. 2007 (அ) | சதவீத மாற்றம்: ஆண்டுச் சராசரி 2006/2005 | 2007/2006 (அ) | புள்ளிக்குப் புள்ளி திசெ.2006/திசெ. 2005 | திசெ.2007/திசெ. 2006 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | அரிசி - சம்பா | கி.கி | 2.8 | 41.80 | 41.15 | 50.98 | 44.46 | 45.40 | 63.71 | -1.6 | 23.9 | 2.1 | 40.3 |
| | அரிசி - பச்சை (சிவப்பு) | கி.கி | 0.9 | 32.85 | 31.19 | 44.56 | 32.10 | 38.27 | 55.32 | -5.1 | 42.9 | 19.2 | 44.6 |
| | அரிசி - பச்சை (வெள்ளை) | கி.கி | 0.6 | 28.51 | 27.37 | 38.78 | 29.42 | 32.01 | 51.68 | -4.0 | 41.7 | 8.8 | 61.4 |
| | அரிசி - நாடு | கி.கி | 0.5 | 31.80 | 31.48 | 44.45 | 33.65 | 38.01 | 56.99 | -1.0 | 41.2 | 13.0 | 49.9 |
| | தேங்காய் (நடுத்தரம்) | காய் | 5.4 | 16.65 | 15.65 | 21.83 | 16.39 | 18.62 | 27.83 | -6.0 | 39.5 | 13.6 | 49.5 |
| | மீன் - கெலவல்ள | கி.கி | 1.1 | 264.75 | 308.14 | 407.10 | 275.60 | 333.81 | 414.72 | 16.4 | 32.1 | 21.1 | 24.2 |
| | அவரை | கி.கி | 0.5 | 69.36 | 75.99 | 83.51 | 73.64 | 102.10 | 82.93 | 9.6 | 9.9 | 38.6 | -18.8 |
| | கத்தரி | கி.கி | 0.2 | 42.10 | 47.67 | 52.12 | 45.76 | 71.31 | 55.99 | 13.2 | 9.3 | 55.8 | -21.5 |
| | முட்டைகள் | ஒன்று | 0.4 | 7.26 | 7.06 | 9.31 | 6.71 | 9.09 | 11.64 | -2.8 | 31.9 | 35.5 | 28.1 |
| இறக்குமதிகள் | சீனி | கி.கி | 1.1 | 41.93 | 60.20 | 54.30 | 43.66 | 65.35 | 53.21 | 43.6 | -9.8 | 49.7 | -18.6 |
| | பால்மா - அங்கர் | 400கி | 3.8 | 156.26 | 160.55 | 189.32 | 158.98 | 165.83 | 268.82 | 2.7 | 17.9 | 4.3 | 62.1 |
| | சிவப்புப்பருப்பு | கி.கி | 0.8 | 76.51 | 75.49 | 103.80 | 75.87 | 81.94 | 117.64 | -1.3 | 37.5 | 8.0 | 43.6 |
| | கோதுமை மா | கி.கி | 0.2 | 28.99 | 34.22 | 55.36 | 29.13 | 40.47 | 66.12 | 18.0 | 61.8 | 38.9 | 63.4 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஏற்பட்ட அதிகரிப்புக்களும் கணிசமானவையாகும். எனினும், இதற்கு முரணாக குறிப்பாக இந்தியா மற்றும் பிரேசிலிலிருந்தான அதிகரித்த உலக வழங்கலுடன் சீனியின் சராசரி இறக்குமதி விலை ஐ.அ.டொலர் நியதிகளில் 24 சதவீதத்தால் வீழச்சியடைந்தது. இதைப் பிரதிபலிக்கும் வகையில் 2007இல் உள்நாட்டு நுகர்வோர் விலைகளும் 2006 உடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி விலை வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

**மசகெண்ணெய் விலைகளிலான பாரிய உயர்வு, 2007இல் பொதுவான செலவு அமைப்பை உயர்த்தும் முக்கிய உந்து விசையாக விளங்கியது.** இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் சராசரி விலை 2006இன் பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 64 இலிருந்து 2007இல் பீப்பா ஒன்று ஐ.அ.டொலர் 71 இற்கு ஏறத்தாழ 10 சதவீதத்தால் அதிகரித்தமை, உள்நாட்டு எரிபொருள் விலைகளின் மேல் நோக்கிய திருத்தத்தை கட்டாயப்படுத்தியது. இது போலவே, திரவப் பெற்றோலிய வாயுவின் உயர் பன்னாட்டு விலை, இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்த கிலோக்கிராமொன்றின் ஐ.அ.டொலர் 0.62 உடன் ஒப்பிடுகையில் 2007 திசெம்பர் அளவில் கிலோக் கிராமொன்றுக்கு ஐ.அ.டொலர் 1.2 கொண்ட உச்ச அளவுக்கு உயர்ந்ததுடன், இவ்வாண்டில் பல தடவைகள் உள்நாட்டு விலைகளை அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக திரவப் பெற்றோலிய வாயுவின் உள்நாட்டு விலை சராசரியாக 35 சதவீதத்தால் அதிகரித்தது. வளமாக்கியின் இறக்குமதி விலையும் 2006 இன் 3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2007இல் 18 சதவீதத்தால் அதிகரித்தது. உயர்ந்த பன்னாட்டு விலைகளுக்குப் புறம்பாக, இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கள், உயர் எரிபொருள் விலைகளுக்கு இசைந்து செல்லும் வகையில் அதிகரித்த கப்பற் சரக்குக் கட்டணங்களால் பாதிப்புக்குள்ளாகின.

**2006 உடன் ஒப்பிடுகையில், 2007இல் இலங்கை ரூபா, ஐ.அ. டொலருக்கு எதிராக சராசரியாக 6.0 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்த போதிலும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஆண்டின் பிற்பகுதியில் நாணயத்தின் பெருமளவு பெறுமான வளர்ச்சி காரணமாக 1.0 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டது.** நாணயத் தேய்வின் தாக்கம், ஐ.அ.டொலர் நியதிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபா நியதிகளில் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட உயர் அதிகரிப்பால் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், நுகர்வோர் மீது முக்கிய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதி விலைகளின் தாக்கம் சுங்கத்தீர்வையை நீக்கியமை அல்லது குறைத்தமை காரணமாக ஓரளவிற்கு குறைக்கப்பட்டது.

**2007இல் பல நிருவாக விலைத் திருத்தங்கள் இடம் பெற்றன.** இது, உள்நாட்டில் உற்பத்தி செய்த பொருட்கள், அதுபோல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகரித்துச் செல்லும் விலை மட்டங்கள்மீது நேரடித் தாக்கத்தையும், மறைமுகத் தாக்கத்தையும் கொண்டிருந்தது. எரிபொருள் விலைகளுக்கான சீர்திருத்தங்கள் இவ்வாண்டில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளை முறையே 20 சதவீதம், 18 சதவீதம், மற்றும் 43 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தன. திருத்தங்களைத் தொடர்ந்து, பேருந்துக் கட்டணங்களின் 16.5 சதவீத அதிகரிப்பு உள்ளடங்கலாக, போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. வீட்டுப் பாவனை மற்றும் கைத்தொழில் பயன்பாட்டாளர்களின் மின் கட்டணங்களும் இவ்வாண்டில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

**அட்டவணை 4.3** **நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் 2006 மற்றும் 2007**

| விடயம் | அலகு | விலை (திசெ.) ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2005 | 2006 | 2007 | 2006/2005 | 2007/2006 |
| சிகரட்கள் (கோல்ட்லீவ்) | 1 | 10.50 | 11.00 | 14.00 | 4.8 | 27.3 |
| சிகரட்கள் (பிறிஸ்டல்/விக்ரோய்) | 1 | 9.00 | 9.50 | 12.00 | 5.6 | 26.3 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி.லீற் | 365.00 | 410.00 | 525.00 | 12.3 | 28.0 |
| அதிவிசேட சாராயம் | 750 மில்லி.லீற் | 335.00 | 360.00 | 450.00 | 7.5 | 25.0 |
| டீசல் | ஒரு லீற்றர் | 50.00 | 60.00 | 75.00 | 20.0 | 25.0 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர். | 30.00 | 48.00 | 68.00 | 60.0 | 41.7 |
| பெற்றோல் | ஒரு லீற்றர் | 80.00 | 92.00 | 117.00 | 15.0 | 27.2 |
| உலை எண்ணெய் (1000) | ஒரு லீற்றர் | 24.70 | 44.40 | 52.70 | 79.8 | 18.7 |
| உலை எண்ணெய் (1500) | ஒரு லீற்றர். | 30.30 | 43.30 | 51.70 | 42.9 | 19.4 |
| உலை எண்ணெய் (3500) | ஒரு லீற்றர். | 28.00 | 41.00 | 46.65 | 46.4 | 13.8 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | அலகு வீச்சு | 30.00 | 60.00 | 60.00 | 100.0 | 0.0 |
| | 31-60 வீச்சு | 30.00 | 90.00 | 90.00 | 200.0 | 0.0 |
| | 61-90 வீச்சு | 30.00 | 120.00 | 120.00 | 300.0 | 0.0 |
| | 91-180 வீச்சு | 30.00 | 180.00 | 180.00 | 500.0 | 0.0 |
| | >180 வீச்சு | 30.00 | 240.00 | 240.00 | 700.0 | 0.0 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | அலகு வீச்சு | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | 31-60 வீச்சு | 3.70 | 4.70 | 4.70 | 27.0 | 0.0 |
| | 61-90 வீச்சு | 4.10 | 5.10 | 7.50 | 24.4 | 47.1 |
| | 91-180 வீச்சு | 10.60 | 12.10 | 14.00 | 14.2 | 15.7 |
| | >180 வீச்சு | 15.80 | 17.30 | 19.80 | 9.5 | 14.5 |
| பேருந்துக் கட்டணம் | | - | - | - | 16.0 | 16.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக் குறிப்பு 10

## புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

ஒரு நாட்டினுடைய பணவீக்க அழுத்தத்தை அளவிடுவதற்கும் நாணயக் கொள்கையின் பிரதான நோக்கமான விலை உறுதித் தன்மையினை அடைவதற்கான கொள்கை வகுத்தலுக்கும், ஓர் நம்பகத் தன்மை வாய்ந்த, சரியான மற்றும் உரிய காலத்தில் கிடைக்கத்தக்கதாக உள்ள பணவீக்க அளவீடு தேவைப்படுகிறது. அனேகமான நாடுகளில், இத்தகைய நோக்கத்திற்காகவே நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆனது நுகர்வோரால் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் குழுவால் நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுடைய கூடை ஒன்றின் செலவினால் அளவிடப்படுவதுடன் கூடையில் உள்ள விடயங்களின் சராசரி விலைகளால் அவை குறிப்பிடப்படுகின்றன. இலங்கையில் 5 தசாப்தங்களுக்கு மேலாக இந்த நோக்கத்துக்காக பரந்தளவில் பயன்படுத்தப்படும் சுட்டெண்ணாக, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் கணிப்பிடப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு) காணப்பட்டது.

1953இலிருந்து இலங்கையினுடைய அதிகாரபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில், ஓர் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விலைச் சுட்டெண்ணாக இது விளங்கியபோதும் அதன் பிற்பாடு ஏற்பட்ட பல்வேறு அமைப்பியல் மாற்றங்களுடன் இதனுடைய பிரயோகத்தன்மை இன்று மிகக் குறைவானதாக காணப்படுகின்றது. இது பல்வேறு இயல்பாக எழும் குறைபாடுகளால், பிரதானமாக ஐந்தரைத் தசாப்தங்களுக்கு அதிகமான பழமை வாய்ந்த அடிப்படையால் பாதிப்புள்ளாகிறது. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வலுவான தன்மையானது குறிப்பிட்ட குடித்தொகையின் சராசரி வீட்டுத் தொகுதியினரின் நடைமுறை நுகர்வு பழக்க வழக்கத்தை உள்வாங்கிக் கொள்ளும் அளவிலேயே தங்கியுள்ளது. நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்படவிருக்கும் விடயங்கள் மற்றும் அவற்றுக்காக ஒதுக்கப்படும் தொடர்புடைய நிறையிடல்கள் என்பன, இலக்கிடப்பட்ட குழுவினுடைய நுகர்வுப் பழக்கத்தை பற்றிய சமகால அளவீடுகளில் கண்டறியப்பட்ட முடிவுகளின் அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும். நுகர்வோரால் நுகரப்படும் ஒவ்வொரு விடயங்களினதும் தொடர்புடைய முக்கியத்துவமானது காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் வீட்டுத் தொகுதியினரின் செலவு மதிப்பீடுகளின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுவதன் அடிப்படையில் சுட்டெண்ணில் உள்ள ஒவ்வொரு விடயத்துக்கும் ஒதுக்கப்படும் நிறையிடலால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. இலங்கையில் மிகப் பழமைவாய்ந்த சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 1949/50இல் கொழும்பு மாநகர எல்லைக்குள் வாழ்ந்த 455 தொழிலாளர் வர்க்க வீட்டுடைமையாளர்களின் ஆகக் குறைந்த மாதாந்த செலவீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதன் பிரகாரம் கொ.நு.வி.சு காலம் கடந்ததாகக் காணப்படுகிறது.

2002இல் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்ட வீட்டுமையாளர்களின் வருமான மற்றும் செலவு மதிப்பீட்டின் பிரகாரம், வருமான மட்டங்களின் விருத்திகள் மற்றும் புதிய பொருட்கள் மற்றும் சேவைகளின் கிடைப்பனவுத் தன்மைகளால் சுவைகள் மற்றும் நுகர்வோரின் விருப்பங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் கடந்த 50 ஆண்டுகளில் வீட்டுடமையாளர்களின் நுகர்வு மட்டங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. இத்தகைய மாற்றங்கள் கொழும்பு

**அட்டவணை சி.கு. 10.1**

**கொ.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு.(பு) இனுடைய அடிப்படைப் பண்புகள்**

| அடிப்படை கூறு | கொ.நு.வி.சு | | கொ.நு.வி.சு (பு) | |
|---|---|---|---|---|
| அடிப்படைக்காலம் | காலம் கடந்தது | : 1952 | மிக அண்மையது | : 2002 |
| பிரதிநிதித்தவப்படுத்தும் சனத்தொகை | வரையறுக்கப்பட்டது | : தொழில் வகுப்பு | அதிகரிப்பின் பங்கு | : அனைத்து நகர |
| புவியியல் பரப்பு உள்ளடக்கம் | குறுகியது | : கொழும்பு நகரம் | விரிவானது | : கொழும்பு மாவட்டம் |
| மாதிரி அளவு | தாழ்வானது | : 455 வீட்டுடமையாளர்கள் | உயர்வானது | : 1300 வீட்டுடமையாளர்கள் |
| விலை சேகரிப்பு நிலையங்கள்[1] | குறைவு | : 07 | அதிகம் | : 12 |
| விடயங்களின் எண்ணிக்கை | தாழ்வு | : 213 | உயர்வு | : 334 |
| மொத்த கூடைப் பெறுமதி (ரூபா) | 202.24 | | 17,996.38 | |

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

[1] கொ.நு.வி.சுட்டெண்ணில் புறக்கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, தெமட்டகொட, பலாமரச்சந்தி, பொரளை மற்றும் கிருலப்பனை ஆகிய 7 நிலையங்கள் காணப்பட்ட வேளையில் கொ.நு.வி.சுட்டெண் (பு)இல் புறக்கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, தெமட்டகொட, பலாமரச்சந்தி, பொரளை, கிருலப்பனை, தெகிவளை, கோட்டை, நுகேகொட, கொலன்னாவை மற்றும் இரத்மலானை போன்ற 12 நிலையங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## அட்டவணை சி.கு. 10.2
## கொ.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு.(பு) என்பவற்றின் செலவின நிறைகள்

| குழு | கொ.நு.வி.சு[2] அடிப்படை: 1952=100 ( %) | கொ.நு.வி.சு(பு) அடிப்படை: 2002=100 ( %) |
|---|---|---|
| 1. உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் | 68.32 | 46.71 |
| 2. வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப் பொருள் | 7.85 | - |
| 3. புடவைகள் மற்றும் பாதணிகள் | 5.44 | 3.08 |
| 4. வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 9.54 | 18.29 |
| 5. தளபாடமிடல், வீட்டு உபகரணம், மற்றும் வழமையான வீட்டுப்பராமரிப்பு | - | 3.22 |
| 6. நலம் | 0.43 | 4.18 |
| 7. போக்குவரத்து | 1.76 | 9.47 |
| 8. தொடர்பாடல் | 0.16 | 4.42 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | } 6.50 | 2.18 |
| 10. கல்வி | | 5.79 |
| 11. ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | | 2.65 |
| மொத்தம் | 100.00 | 100.00 |

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்


நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படுகின்ற விலை அசைவுகளுடைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கூடையினுடைய அளவு, உள்ளடக்கம் மற்றும் சேர்க்கை என்பவற்றை குறிப்பிடத்தக்களவால் மாற்றியமைத்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையானது திரவப் பெற்றோலிய வாயு, நீர், தொலைபேசி, தனியார் வகுப்புக்கள் போன்ற சில பிரதான நடைமுறைச்செலவு விடயங்கள் மற்றும் நுளம்புத்திரி போன்ற சில பிரசித்திவாய்ந்த விடயங்களை உள்ளடக்கியிருக்கவில்லை. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் உணவு விடயங்கள் குறிக்கத்தக்க அளவால் மிகையாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் 1949/50 இல் உணவானது நுகர்வு பாதிட்டில் பிரதான விடயமாக உள்ளடக்கியிருந்தது. காலத்துக்குக்காலம் சுட்டெண்ணில் சிலமாற்றங்கள் செய்யப்பட்டபோதும் அத்தகைய மாற்றங்கள் தற்காலிகமானவையுடன் வரையறுக்கப்பட்ட நோக்கங்களை கொண்டவையாகவும் காணப்பட்டன. சுட்டெண்ணானது பல்வேறு விடயங்களின் விலை மாற்றங்களுக்கு உயர்ந்தளவு உணர்திறனை கொண்டதாக காணப்படுகிறது. ஆயினும் ஆண்டுகளில் சிறந்த பதிலீடுகள் வளர்ந்துவருவதால் இதனுடைய முக்கியத்துவம் குறிப்பிடத்தக்களவால் குறைவடைந்து செல்கிறது.

மேலும் அதிக பிரதிநிதித்துவப்படுத்தும் நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்றின் தேவை பல்வேறு தரப்பினராலும் தசாப்தங்களாக மீண்டும், மீண்டும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. நீண்ட காலம் உணரப்பட்ட இந்த தேவையின் நோக்கில், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் பழைய சுட்டெண்ணின் பல்வேறு குறைபாடுகளில் நிவர்த்தி செய்து 2007 நவெம்பரில் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்று அழைக்கப்படும் மிக விரிவான நுகர்வோர் விலைச்சுட்டெண் கட்டமைக்கப்பட்டது. இது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட 2002ஆம் ஆண்டினுடைய வீட்டுடமையாளர் வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டினால் பிரதிபலிக்கப்பட்டவாறான மிக அண்மைய நுகர்வோர் செலவு முறைமையை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் இது புவியியல் உள்ளடங்கப் பரப்பாலும் மற்றும் நோக்கத்தாலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் காட்டிலும் விரிவான பிரதிநிதித்துவப்படுத்தலைக் கொண்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (புதிய) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் அட்டவணை சி.கு. 10.1 இல் குறித்துக் காட்டப்பட்டுள்ள அதே நேரம் இரண்டு குறியீடுகளினதும் ஒப்பீட்டு நிறையிடல் அட்டவணை சி.கு 10.2 இல் காட்டப்பட்டுள்ளது. கொ.நு.வி.சு(பு) மேலதிக விபரங்கள் இணைப்பு சி.கு. 10.1 இல் தரப்பட்டுள்ளது..


உணவுக்கான செலவின் பங்கு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் 68 சதவீதத்திலிருந்து புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் 45 சதவீதத்திற்கு மிக அதிகளவான வீழ்ச்சியை கொண்டிருந்தமை வீட்டுடமை நுகர்வில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். கொ.நு.வி.சு ஆனது மண்ணெண்ணெய், விறகு, மரக்கறிகள் மற்றும் தேங்காய் என்பவற்றுக்கு ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான நிறையிடலை கொண்டிருந்த அதேநேரம் பெற்றோல், டீசல், சமையல் வாயு, தொலைபேசிக் கட்டணம் மற்றும் தனியார் வகுப்பு கட்டணங்களை கூடையில் கொண்டிருக்கவில்லை. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள்களுடைய உபகுழு பழைய சுட்டெண்ணில் போதியளவு பிரதிபலிக்கவில்லை. உதாரணமாக, இது திரவப் பெற்றோலிய வாயுவை ஒரு போதும் உள்ளடக்கவில்லை. அத்துடன் மின்சாரத்திற்கான நிறையிடல் கூட

2 ஒப்பீட்டு நோக்கங்களுக்கான நோக்கங்களின்படி தனிப்பட்டவர்களின் நுகர்வு பகுப்பாய்வுகளின்படி கொ.நு.வி.சுட்டெண்ணின் ஐந்து துணைத் தொகுதிகளும் மீள வகைப்படுத்தப்பட்டன.

வரைபடம் சி.கு. 10.1 கொ.நு.வி.சு இன் நிறைப் பரம்பல்




வரைபடம் சி.கு. 10.2 கொ.நு.வி.சு(பு) இன் நிறைப் பரம்பல்




முக்கியத்துவமற்றதாக இருந்தது. தொடர்பாடல் மற்றும் கல்வி போன்ற பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கான செலவினங்களின் பங்குகள் ஒப்பீட்டளவில் குறைவாகவும் காணப்பட்டது. கொ.நு.வி.சு. (பு) ஆனது நுகர்வோர் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் அதிகளவில் பிரதிநிதித்துப்படுத்துவதுடன் பொருட்கள் மற்றும் சேவைகளின் சேர்க்கையை விரிவாக உள்ளடக்குகிறது. அத்துடன் மேலும் இது நுகர்வோர் விலைகளின் ஒட்டு மொத்த அசைவுகளில் அதிக நம்பகத்தன்மை வாய்ந்த குறிகாட்டியாகும். ஆகவே, இலங்கையினுடைய பணவீக்க அளவீட்டுக்கான அதிகார பூர்வ சுட்டெண்ணாக தற்போது கொ.நு.வி.சு(பு) பயன்படுத்தப்படுகிறது. இச்சுட்டெண்ணானது மாற்றமுறும் நுகர்வு முறையை உள்வாங்கிக் கொள்ளும் முகமாக ஓர் சீரான இடைவெளியில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும்.


ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தினுடைய அசைவுகள் (புள்ளிக்குப் புள்ளி மாத்திரம்) மற்றும் 2002 - 2007 காலப்பகுதிக்கான கொ.நு.வி.சு. மற்றும் கொ.நு.வி.சு (பு) இனுடைய ஆண்டுச் சராசாசி பணவீக்கம் என்பன அட்டவணை சி.கு. 10.3 மற்றும் வரைபடங்கள் சி.கு. 10.3 மற்றும் சி.கு. 10.4இல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை சி.கு. 10.3 : கொ.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு.(பு) இனுடைய அசைவுகள்


| ஆண்டு | சுட்டெண் இலக்கம் | | பணவீக்க விகிதம் (% மாற்றம்) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கொ.நு.வி.சு 1952=100 | கொ.நு.வி.சு 2002=100 | ஆண்டுக்கு ஆண்டு (புள்ளிக்கு புள்ளி) | | ஆண்டுச் சராசரி | |
| | | | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு(பு) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு(பு) |
| 2002 | 3,176.4 | 100.0 | 11.3 | | 9.6 | |
| 2003 | 3,377.0 | 105.8 | 5.0 | | 6.3 | |
| 2004 | 3,632.8 | 115.3 | 13.8 | 13.0 | 7.6 | 9.0 |
| 2005 | 4,055.5 | 128.0 | 8.0 | 7.4 | 11.6 | 11.0 |
| 2006 | 4,610.8 | 140.8 | 19.3 | 13.5 | 13.7 | 10.0 |
| 2007 | 5,416.1 | 163.1 | 16.4 | 18.8 | 17.5 | 15.8 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 10.3 கொ.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு (பு) இனுடைய ஆண்டுக்கு ஆண்டு (புள்ளிக்குப் புள்ளி) அசைவு




வரைபடம் சி.கு. 10.4 கொ.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு (பு) இன் வருடாந்தச் சராசரி அசைவுகள்



முதன்மைப் பணவீக்கத்திற்குப் புறம்பாக, பல நாடுகளும் மையப் பணவீக்க வழிமுறையினை வெளியிட்டதுடன், மத்திய வங்கிகள் பலவும் தற்பொழுது நாணயக் கொள்கை நோக்கங்களுக்காக மையப் பணவீக்கத்தினை கண்காணித்து வருகின்றன. மையப் பணவீக்கத்தினைக் கணிப்பதற்காக கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகள் அது போல் தோற்றம் பெற்றுவரும் பொருளாதார நாடுகள் ஆகிய குறிப்பிட்ட நாடுகளினாலும் பின்பற்றப்பட வேண்டிய அட்டவணை சி.கு. 10.4இல் தொகுத்துத் தரப்படுகின்றன.

**அட்டவணை சி.கு. 10.4**

**தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளினால் பின்பற்றப்படும் மையப்பணவீக்க வழிமுறைகள்**

| நாடு | அலுவல்சார் மையப்பணவீக்கம் | ஏனைய மையப்பணவீக்க வழிமுறைகள் |
|---|---|---|
| **கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகள்** | | |
| கனடா | உணவு, வலு மற்றும் நேரில் வரியினை விலக்கிய நு.வி. சுட்டெண் | நு.வி. சுட்டெண்ணிலிருந்து 8 அதிக தளம்பலுடைய விடயங்களை விலக்குகின்றது. (மொத்தக்கூடையில் 16%) நிறையேற்றப்பட்ட இடையம் சீராக்கப்பட்ட இடை (15%) |
| ஐக்கிய இராச்சியம் | ஈட்டு வட்டி வீதங்களை விலக்கிய சில்லறை விலைச்சுட்டெண் | நிறையேற்றப்பட்ட இடையம் சீராக்கப்பட்ட இடை |
| ஐக்கிய அமெரிக்கா | உணவு மற்றும் வலுவினை விலக்கிய நு.வி. சுட்டெண் | |
| யப்பான் | உடனடி உணவுப் பொருட்களை விலக்கிய சுட்டெண் | உணவு (வெறியக் குடிவகையற்ற பானங்கள்) மற்றும் வலுவை விலக்கிய நு.வி. சுட்டெண். |
| **வளர்ச்சியடைந்து வரும் சந்தை நாடுகள்** | | |
| பிலிப்பைன்சு | உணவு மற்றும் வலுவை விலக்கிய நு.வி. சுட்டெண். | சீராக்கப்பட்ட இடை (30%) நிறையேற்றப்பட்ட இடையம் தளம்பலுடையும் விடயங்களை விலக்கிய நு.வி. சுட்டெண். |
| பாகித்தான் | உணவு மற்றும் ஆறு வலு விடயங்களை விலக்கிய நு.வி. சுட்டெண். | சீராக்கப்பட்ட இடை (20%) |
| சீனா | உணவு மற்றும் வலுவை விலக்கிய நு.வி. சுட்டெண். | |
| தாய்லாந்து | உடனடி உணவுப் பொருட்களை மற்றும் வலுவை விலக்கிய நு.வி. சுட்டெண். | சீராக்கப்பட்ட இடை (10%) |

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில், அண்மைய எதிர்காலத்தில் கொ.நு.வி.சுட்டெண் (பு)இனை அடிப்படையாகக் கொண்ட மையப்பணவீக்க வழிமுறைகளை பின்பற்றுவதற்கு இலங்கையும் திட்டமிட்டு வருகின்றது. 2007ஆம் ஆண்டிற்கான கொ.நு.வி.சுட்டெண்(பு) இருந்து உணவு மற்றும் வலு விடயங்களை நீக்கியமையின் மூலம் கணிக்கப்பட்ட மையப் பணவீக்க எண்தொகைகள் வரைபடம் 10.5இல் தரப்பட்டுள்ளன.

வரைபடம் சி.கு. 10.5 **மையப் பணவீக்கம் - 2007**



## கொ.நு.வி.சு.(பு) சுட்டெண்ணுக்கான அடித்தள நிறைகள் (குழுக்கள்/ துணை வகுப்பு; அடிப்படை 2002 = 100)

இணைப்பு சி.கு 10.1

| நோ.த.நு.வ குறியீடு | குழு / துணை வகுப்பு | குழு மொத்தம் (ரூ) | % |
|---|---|---|---|
| | **மொத்தம்** | 17,996.38 | 100.00 |
| **1** | **உணவு மற்றும் வெறியக் குடிவகையல்லாத குடிபானங்கள்** | **8,405.65** | **46.71** |
| **1.1** | **உணவு** | **8,188.70** | **45.50** |
| 1.1.1 | பாண் மற்றும் உணவுத் தானியம் | 3,086.56 | 17.15 |
| 1.1.2 | இறைச்சி | 534.75 | 2.97 |
| 1.1.3 | மீன் மற்றும் கடலுணவு | 1,011.07 | 5.62 |
| 1.1.4 | பால் வெண்ணெய்க் கட்டி மற்றும் முட்டைகள் | 1,359.96 | 7.56 |
| 1.1.5 | எண்ணெய்வகை மற்றும் கொழுப்புக்கள் | 273.28 | 1.52 |
| 1.1.6 | பழம் | 392.98 | 2.18 |
| 1.1.7 | மரக்கறிகள் | 579.35 | 3.22 |
| 1.1.8 | சீனி, பழப்பாகு, தேன், சொக்கலேட், மற்றும் இனிப்புப் பண்டம் | 302.57 | 1.68 |
| 1.1.9 | உணவு உற்பத்திகள் | 648.17 | 3.60 |
| **1.2** | **வெறியக் குடிவகையற்ற பானங்கள்** | **216.95** | **1.21** |
| 1.2.1 | கோப்பி, தேநீர், மற்றும் கொக்கோ | 216.95 | 1.21 |
| **3** | **புடவையும் காலணியும்** | **554.86** | **3.08** |
| **3.1.** | **புடவை** | **469.49** | **2.61** |
| 3.1.1 | உடுப்பதற்கான துணிவகைகள் | 32.12 | 0.18 |
| 3.1.2 | தைக்கப்பட்ட ஆடைகள் | 424.55 | 2.36 |
| 3.1.4 | ஆடைகளைச் சுத்தம் செய்தல் | 12.81 | 0.07 |
| **3.2** | **காலணி** | **85.38** | **0.47** |
| 3.2.1 | சப்பாத்துக்கள் மற்றும் ஏனைய காலணிகள் | 85.38 | 0.47 |
| **4** | **வீடமைப்பு, நீர், மின்சாரம், வாயு மற்றும் ஏனைய எரிபொருள்** | **3,291.30** | **18.29** |
| **4.1** | **வீட்டிற்கான உண்மை வாடகை** | **1,537.24** | **8.54** |
| 4.1.1 | குடியிருப்பாளர்களினால் செலுத்தப்பட்ட உண்மை வாடகை | 1,537.24 | 8.54 |
| **4.3** | **குடியிருப்புக்களின் பேணுகையும் திருத்தங்களும்** | **375.55** | **2.09** |
| 4.3.1 | குடியிருப்புக்களின் பேணுதல் மற்றும் திருத்தலுக்கான பொருட்கள் | 375.55 | 2.09 |
| **4.4** | **குடியிருப்புக்களுடன் தொடர்புபட்ட நீர் வழங்கல் மற்றும் பல்வகைப்பணிகள்** | **186.16** | **1.03** |
| 4.4.1 | நீர் வழங்கல் | 186.16 | 1.03 |
| **4.5** | **மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்** | **1,192.35** | **6.63** |
| 4.5.1 | மின்வலு | 735.51 | 4.09 |
| 4.5.2 | வாயு | 287.28 | 1.60 |
| 4.5.3 | திரவ எரிபொருட்கள் | 134.18 | 0.75 |
| 4.5.4 | திண்ம எரிபொருட்கள் | 35.38 | 0.20 |
| **5** | **வீட்டுப்பாவனைக்குரிய சாதனங்கள் பொருத்துக்கள் மற்றும் வழமையான வீட்டுப்பாவனை பேணுதல்கள்** | **580.16** | **3.22** |
| **5.1** | **தளபாடம் மற்றும் பொருத்துக்கள் சமுக்காளம் மற்றும் ஏனைய தரை விரிப்புக்கள்** | **156.78** | **0.87** |
| 5.1.1 | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 156.78 | 0.87 |
| **5.2** | **வீட்டுப்பாவனைப் புடவைகள்** | **16.03** | **0.09** |
| 5.2.0 | வீட்டுப்பாவனைப் புடவைகள் | 16.03 | 0.09 |
| **5.3** | **வீட்டுப்பாவனைச் சாதனங்கள்** | **71.06** | **0.39** |
| 5.3.1 | முக்கிய வீட்டுத்துறை சாதனங்கள் இலத்திரனியல் அல்லது இலத்திரனியல் அல்லாதவை | 71.06 | 0.39 |
| **5.4** | **கண்ணாடிப் பொருட்கள், மேசைத்தட்டுமுட்டுக் கலங்கள் மற்றும் வீட்டுப்பாவனைப் பாத்திரங்கள்** | **82.03** | **0.46** |
| 5.4.0 | கண்ணாடிப் பொருட்கள், மேசைத்தட்டுமுட்டுக் கலங்கள் மற்றும் வீட்டுப்பாவனைப் பாத்திரங்கள் | 82.03 | 0.46 |
| **5.5** | **வீடு மற்றும் தோட்டத்திற்கான கருவிகள் மற்றும் சாதனங்கள்** | **20.52** | **0.11** |
| 5.5.2 | சிறிய கருவிகள் மற்றும் நானாவித துணைக் கருவிகள் | 20.52 | 0.11 |
| **5.6** | **வழமையான வீட்டுப் பேணுதலுக்கான பொருட்கள் மற்றும் பணிகள்** | **233.74** | **1.30** |
| 5.6.1 | நீடித்து உழைக்காத வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 225.09 | 1.25 |
| 5.6.2 | உள்நாட்டுப் பணிகள் மற்றும் வீட்டுப்பணிகள் | 8.65 | 0.05 |
| **6** | **நலம்** | **752.01** | **4.18** |
| **6.1** | **மருத்துவ உற்பத்திகள் கருவிகள் மற்றும் சாதனங்கள்** | **250.48** | **1.39** |
| 6.1.1 | மருந்துகள் தயாரிக்கும் உற்பத்திகள் | 210.93 | 1.17 |
| 6.1.3 | மருத்துவ உபகரணங்கள் கருவிகள் | 39.55 | 0.22 |
| **6.2** | **வெளிநோயாளர் பணிகள்** | **501.53** | **2.79** |
| 6.2.1 | மருத்துவப் பணிகள் | 412.81 | 2.29 |
| 6.2.3 | துணை மருத்:துவப் பணிகள் | 88.72 | 0.49 |

| நோ.த.நு.வ குறியீடு | குழு / துணை வகுப்பு | குழு மொத்தம் (ரூ) | % |
|---|---|---|---|
| **7** | **போக்குவரத்து** | **1,703.83** | **9.47** |
| **7.1** | **வாகனக் கொள்வனவு** | **178.55** | **0.99** |
| 7.1.2 | உந்து ஊர்திகள் | 178.55 | 0.99 |
| **7.2** | **தனியாள் போக்குவரத்து சாதனங்களின் தொழிற்பாடு** | **922.35** | **5.13** |
| 7.2.1 | தனியாள் போக்குவரத்துச் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்களும் துணைக்கருவிகளும் | 87.97 | 0.49 |
| 7.2.2 | தனியாள் போக்குவரத்துச் சாதனங்களுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 466.44 | 2.59 |
| 7.2.3 | சாதனத்தின் பேணல் மற்றும் திருத்தங்கள் | 206.88 | 1.15 |
| 7.2.4 | தனியாள் போக்குவரத்து சாதனத்துடன் தொடர்புபட்ட ஏனைய பணிகள் | 161.06 | 0.89 |
| **7.3** | **போக்குவரத்துப் பணிகள்** | **602.93** | **3.35** |
| 7.3.1 | ரயில் பாதை மூலமான பயணிகள் போக்குவரத்து | 299.84 | 1.67 |
| 7.3.2 | வீதி மூலமான பயணிகள் போக்குவரத்து | 130.83 | 0.73 |
| 7.3.6 | ஏனைய போக்குவரத்துப் பணிகளின் கொள்வனவு | 172.26 | 0.96 |
| **8** | **தொடர்பூட்டல்** | **796.06** | **4.42** |
| **8.1** | **அஞ்சல் பணிகள்** | **32.74** | **0.18** |
| 8.1.0 | அஞ்சல் பணிகள் | 32.74 | 0.18 |
| **8.2** | **தொலைபேசி மற்றும் தொலை நகல் சாதனம்** | **60.14** | **0.33** |
| 8.2.0 | தொலைபேசி மற்றும் தொலை நகல் சாதனம் | 60.14 | 0.33 |
| **8.3** | **தொலைபேசி மற்றும் தொலை நகல் பணிகள்** | **703.18** | **3.91** |
| 8.3.0 | தொலைபேசி மற்றும் தொலை நகல் பணிகள் | 703.18 | 3.91 |
| **9** | **களியாட்டம் மற்றும் கலாச்சாரம்** | **393.21** | **2.18** |
| **9.1** | **செவிப்புல - கட்புல, புகைப்படம் மற்றும் தகவல் செயற்பாட்டுப் பிரிவு** | **93.05** | **0.52** |
| 9.1.1 | ஒலி மற்றும் புகைப் படங்களை பெற்றுக் கொள்ளல், பதிவு செய்தல் மற்றும் மீள் உற்பத்தி செய்வதற்கான சாதனம் | 56.28 | 0.31 |
| 9.1.3 | சாதனத்தை செயற்படுத்துவது தொடர்பான சாதனங்கள் | 29.16 | 0.16 |
| 9.1.5 | கேள்விக்காட்சி, புகைப்படம் மற்றும் தகவல் செயற்பாட்டு சாதனத்தின் திருத்தங்கள் | 7.61 | 0.04 |
| **9.3** | **ஏனைய களியாட்ட விடயங்கள் மற்றும் சாதனம், தோட்டம் மற்றும் செல்லப் பிராணிகள்** | **16.51** | **0.09** |
| 9.3.1 | விளையாட்டுக்கள், பொம்மைகள், மற்றும் பொழுது போக்குகள் | 16.51 | 0.09 |
| **9.4** | **களியாட்டம் மற்றும் கலாச்சாரப் பணிகள்** | **65.33** | **0.36** |
| 9.4.1 | கேளிக்கை மற்றும் விளையாட்டுப் பணிகள் | 14.98 | 0.08 |
| 9.4.2 | கலாச்சாரப் பணிகள் | 15.16 | 0.08 |
| 9.4.3 | அதிட்ட விளையட்டுக்கள் | 35.19 | 0.20 |
| **9.5** | **செய்திப் பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் காகிதாதிகள்** | **79.13** | **0.44** |
| 9.5.2 | செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்கள் | 79.13 | 0.44 |
| **9.6** | **விடுமுறைப் பொதி** | **139.19** | **0.77** |
| 9.6.0 | விடுமுறைப் பொதி | 139.19 | 0.77 |
| **10** | **கல்வி** | **1,041.67** | **5.79** |
| **10.2** | **இரண்டாம் நிலைக் கல்வி** | **812.34** | **4.51** |
| 10.2.0 | இரண்டாம் நிலைக் கல்வி | 812.34 | 4.51 |
| **10.3** | **இரண்டாம் நிலைக்குப் பின் மூன்றாம் நிலை அல்லாததான கல்வி** | **131.71** | **0.73** |
| 10.3.0 | இரண்டாம் நிலைக்குப் பின் மூன்றாம் நிலை அல்லாததான கல்வி | 131.71 | 0.73 |
| **10.5** | **படிமுறைகளினால் குறித்துரைக்க முடியாத கல்வி** | **97.62** | **0.54** |
| 10.5.0 | படிமுறைகளினால் குறித்துரைக்க முடியாத கல்வி | 97.62 | 0.54 |
| **12** | **பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **477.64** | **2.65** |
| **12.1** | **தனியாள் கவனிப்பு** | **323.92** | **1.80** |
| 12.1.1 | சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அலங்கரிப்பு நிலையங்கள் | 82.98 | 0.46 |
| 12.1.3 | தனியாள் கவனத்திற்கான ஏனைய கருவிகள், பொருட்கள் மற்றும் உற்பத்திகள் | 240.94 | 1.34 |
| **12.3** | **வேறு எங்கும் குறிப்பிடப்படாத தனிப்பட்ட பொருட்கள்** | **50.71** | **0.28** |
| 12.3.1 | ஆபரணங்கள், சுவர்க்கடிகாரங்கள், மற்றும் கைக்கடிகாரங்கள் | 39.27 | 0.22 |
| 12.3.2 | ஏனைய தனிப்பட்ட பொருட்கள் | 11.44 | 0.06 |
| **12.5** | **காப்புறுதி** | **82.71** | **0.46** |
| 12.5.3 | நலத்துறையுடன் இணைந்த காப்புறுதி | 82.71 | 0.46 |
| **12.6** | **நிதியியல் பணிகள்** | **20.31** | **0.11** |
| 12.6.2 | ஏனைய நிதியியல் பணிகள் | 20.31 | 0.11 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

இவ்விலைத் திருத்தங்கள், அதிகரித்த போக்குவரத்துச் செலவினம் மற்றும் உள்ளீட்டுச் செலவுகளூடாக தொடர்ச்சியான விளைவைக் கொண்டிருந்த போதிலும், உதவு தொகைகளை நீக்குவது நீண்ட காலத்தில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மீதான குறைக்கப்பட்ட அழுத்தத்தினூடாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் நன்மையளிக்கும்.

**பருவகாலக் காரணிகள் மற்றும் தேசிய அனர்த்தங்கள் காரணமாக நுகர்வோர் விலைகள் தளம்பலைக் காட்டியது.** வெள்ளம், வரட்சி மற்றும் பூச்சிகள் போன்ற தேசிய அழிவுகளுடன் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு பிரதான வேளாண்மை பருவகாலங்களுக்கு இசைந்து செல்லும் வகையில் கைத்தொழிற் பொருட்களைவிட வேளாண்மைப் பொருட்கள் கூடிய தளம்பலைக் காட்டின. இத்துடன், ஏப்பிறல் மற்றும் திசெம்பரில் இரு முக்கியப் பண்டிகைப் பருவகாலங்களிலிருந்து உருவாக்கப்பட்ட அதிகரித்த கேள்வி காரணமாக விலைகள் மெதுவாக மேல் நோக்கி நகர்ந்தன.

## விலைச் சுட்டெண்களின் அசைவு

### புதிய கொழும்பு நுகர்வோர்[1] விலைச் சுட்டெண்-கொ.நு.வி.சு (பு)

**2007ஆம் ஆண்டில் நுகர்வோர் விலை நடத்தை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கொநுவிசு(பு) ஐ அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.** நுகர்வோர் விலைகளின் பொதுவான அசைவுகளை அளவிடுவதற்கு கொநுவி சுட்டெண் (பு) அறிமுகப்படுத்தப்பட்டது. 2002இன் குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அடிப்படையில் எடுத்துக்காட்டப்பட்ட நுகர்வு, மாதிரிகள் அடிப்படையில் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் உருவாக்கப்பட்ட சுட்டெண் 2007 நவெம்பரில், இலங்கையில் பணவீக்கத்தை அளவிடும் அலுவல்சார் அளவீடாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் பழைய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் பிரதியீடு செய்கிறது. மேலும், நாட்டில் பணவீக்கத்தின் தனியொரு நியம அளவீட்டை வைத்திருக்கும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படும் ஐந்து பிரதேச சுட்டெண்கள் மற்றும் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தொகுத்தலையும் நிறுத்துவதற்கு கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது.

**2007 முற்பகுதியில் கொநுவி சுட்டெண்ணின் (பு) புள்ளிக்குப் புள்ளி மாற்றத்தால் எடுத்துக் காட்டப்பட்டவாறு 2006 நடுப்பகுதியிலிருந்து மேல்நோக்கிய அசைவில் காணப்பட்ட பணவீக்க அழுத்தத்தில் மெதுவடைந்து செல்லும் அறிகுறிகள் தென்பட்டன.** எனினும், 2007இன் இரண்டாம் அரைப்பகுதியில் போக்கு எதிர்மாறாகியதுடன் முக்கியமாக பணவீக்கம் விரைவடைந்தது. புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்புக்களால் எடுத்துக் காட்டப்பட்டவாறு அதிகரித்துச் செல்லும் பணவீக்கம் 2007 பெப்புருவரியின் 15.2 சதவீதத்திலிருந்து 2007 மேயில் 13.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இது படிப்படியாக அதிகரித்து பின் நான்காம் காலாண்டிலிருந்து விரைவடைந்து 2006 திசெம்பரின் 13.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007 திசெம்பரில் 18.8 சதவீதத்தைப் பதிவு செய்ததுடன், 2006இன் 10.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டுக்கான 15.8 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரியான உச்சப் பணவீக்கத்தைக் காட்டியது.

**இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினதும் விலை அதிகரிப்புக்கள் பொதுவான பணவீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன.** பணவீக்கம் மீதான மிதமிஞ்சிய செல்வாக்கு மொத்த நுகர்வுச் செலவினத்தில் கிட்டத்தட்ட 74 சதவீதத்துக்கு வகை கூறிய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. எனினும், இவ்வாண்டில் பொதுவான பணவீக்கத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான பங்களிப்பு அதிகரித்ததுடன், இது உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களின் உயர் இறக்குமதி விலைகளால் செல்வாக்குச் செலுத்துப்பட்டு 2007 சனவரியின் 28.7 சதவீதத்திலிருந்து 2007 திசெம்பரில் 39.7 சதவீதத்துக்கு அதிகரித்தது.

**சுட்டெண்ணின் வெவ்வேறான துணைச் சுட்டெண்களை கருத்திற் கொள்கையில், பொதுச் சுட்டெண்ணுக்கான முக்கிய பங்களிப்பு கொநுவி சுட்டெண் (பு) இல் அதி கூடிய நிறையைக் கொண்டிருக்கும் உணவுத் துணைச் சுட்டெண்ணிலிருந்து வந்தது.** உணவுத் துணைச்சுட்டெண் 2007 திசெம்பரில் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் 25 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து, ஆண்டிறுதியில் 20 சதவீதம் கொண்ட ஆண்டுச்சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. இத்துணைச் சுட்டெண் பொதுவான புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பின் 60 சதவீதத்துக்கும் கூடுதலான அளவுக்குப் பொறுப்பாக இருந்தது. அரிசி, பாண், வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உணவுகள், பால்மா, தேங்காய் மற்றும் தேங்காயெண்ணெய் என்பனவற்றின் விலை அதிகரிப்புக்கள் 2007இல் சுட்டெண்மீது பாரிய விளைவை ஏற்படுத்திய முக்கிய உணவுப் பொருட்களாகும், 2006உடன் ஒப்பிடுகையில் 2007இல் 14 சதவீதத்தால் அதிகரித்த திரவப் பெற்றோலிய வாயுவின் விலை அதிகரிப்பு வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உணவுகளின் விலைகள் மீது கணிசமான மறைமுகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

**குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களைக் கொண்டுள்ள ஏனைய துறைகளாக கிட்டத்தட்ட 2007இன் மொத்த அதிகரிப்புக்கு 20 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்த வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு, ஏனைய எரிபொருள் மற்றும் 8 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்த போக்குவரத்து என்பன விளங்கின.** கொநுவி சுட்டெண் (பு) கூடையில் முறையே 18.3 சதவீதம் மற்றும் 9.5 சதவீதத்தைக் கொண்ட அவற்றின் உயர் நிறைகள் காரணமாக

1. மேலதிக விபரங்களுக்கு சிறப்புக் குறிப்பு 10ஐப் பார்க்கவும்.

ஏனைய துணைத் தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் இவ்விரு துணைத் துறைகளிலிருந்தான பங்களிப்புக்கள் கணிசமானளவில் காணப்பட்டன. செலவில் வீழ்ச்சியைப் பதிவு செய்த தொடர்பூட்டல் துணைச் சுட்டெண் தவிர்ந்த ஏனைய சகல துணைச் சுட்டெண்களும் 2007இல் அதிகரிப்புக்களைப் (2.1 சதவீதத்திலிருந்து 20.3 சதவீதம் வரை) பதிவு செய்தன. எனினும், சுட்டெண்ணிலான மொத்த அதிகரிப்புக்கு அவற்றின் தனித்தனியான பங்களிப்புக்கள் அவற்றுக்குரிய நிறைகள் சார்பூரீதியில் குறைவாகவிருந்ததால் 2 சதவீதத்திற்கும் குறைவாகவே விளங்கியது.

### மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (மொ.வி.வி.சு)

**மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்டவாறு முதன்மைச் சந்தை மட்டத்திலான விலைகள் சில்லறை விலைகளை விட உயர் வீதத்தால் அதிகரித்தன.** மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணானது, நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் அதுபோன்று இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதிக்காகவும் உள்நாட்டுப் பயன்பாட்டுக்காகவும் உற்பத்தி செய்யப்பட்ட பல்வகைப் பொருட்களின் விலைகளின் மொத்த அசைவுகளை உற்பத்தியாளர் மட்டத்தில் அளவிடுகிறது. எனினும், இது 1974இல் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் காலாவதியான நிறை அமைப்பால் பாதிப்புக்குள்ளாகிறது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ந்து விரைவடையும் போக்குடன் ஆரம்பமான போதிலும், இரண்டாம் காலாண்டின் ஆரம்பத்திலிருந்து மெதுவடைந்து செல்லும் அறிகுறிகளைக்காட்டியது. இது, உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியானது சந்தைக்கு வந்ததால் ஏற்பட்டதாகும். எனினும், இதற்குப் பின்னரான விலை விருத்தியுடன் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் உறுதியாக அதிகரித்து, 2006 இன் 17.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007 திசெம்பரில் புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பான 26.8 சதவீதத்தைப் பதிவு செய்தது. இதன் விளைவாக, இவ்வாண்டுக்கான ஆண்டுச் சராசரி அதிகரிப்பு முன்னைய ஆண்டின் 11.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 24.4 சதவீதமாக விளங்கியது.

**சுட்டெண்ணின் அதிகரிப்புக்கான முக்கிய பங்களிப்பாளராக கிட்டத்தட்ட 68 சதவீத நிறையைக் கொண்டிருக்கும் உணவு வகை விளங்கியது.** சராசரியாக, இவ்வாண்டிலான மொத்த அதிகரிப்பின் 72 சதவீதமளவுக்கு உணவு துணைச்சுட்டெண் பங்களிப்புச் செய்தது. இது பெரும்பாலும், குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு விலைகளின் பெருமளவு அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். உணவு துணைச் சுட்டெண்ணின் மொத்த அதிகரிப்பைக் கருத்திற் கொள்கையில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்கள் 64 சதவீதமளவுக்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் 16 சதவீதத்தை கொண்டிருந்தன. இரண்டாவது ஆகப் பெரிய நிறையைக் கொண்டிருக்கும் பெற்றோலிய துணைச் சுட்டெண்ணிலான 26.5 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்பு இவ்வாண்டில் பல தடவைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய திருத்தத்தின் விளைவாக ஏற்பட்டது. இத்துறையிலிருந்து மொத்த அதிகரிப்புக்குக் கிடைத்த பங்களிப்பு 14 சதவீதமளவில் காணப்பட்டது. இது போலவே போக்குவரத்து மற்றும் மின்சாதனப் பொருட்கள் துணைத் தொகுதிகளும் முறையே 21 சதவீதம் மற்றும் 24 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இது பெரும்பாலும், மூலப் பொருட்கள், உள்நாட்டு இறப்பர் மற்றும் பன்னாட்டு உலோக விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் வெறியக் குடிவகைகள் மீதான கலால் வரி (12.5 சதவீதம்)மற்றும் வியாபாரப் புரள்வு வரி (3 சதவீதம்) என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் 2007 நவெம்பரில் கலால் வரியின் (2.1 சதவீதம்) மீளாய்வு காரணமாகவும் வெறியக் குடிவகைகள் துணைத்துறையும் 11.7 சதவீதம் கொண்ட சராசரி அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**பொருட்களின் மூலத்தின் அடிப்படையில், ஏற்றுமதிகள் துணைத்துறை, சுட்டெண்ணிலான மொத்த அதிகரிப்புக்கு பெருமளவில் பொறுப்பாக விளங்கியது.** ஏற்றுமதிகள் தொகுதி இவ்வாண்டில் உறுதியான வேகத்தில் அதிகரித்து 36.1 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. சுட்டெண்ணின் பொதுவான அதிகரிப்பில் இது 51 சதவீதத்திற்கு பங்களித்தது. இது பெரும்பாலும், அதிகரித்த மசகெண்ணெய் விலைகளுடன் இணைந்து உலக வழங்கல் பற்றாக் குறையிலிருந்து தோன்றிய இறப்பர் மற்றும் தேயிலைக்கான அதிகரித்த உலக கேள்வியால் உந்தப்பட்ட உயர் பன்னாட்டு விலைகளால் ஏற்பட்டதாகும். பெற்றோலியம், கோதுமைத் தானியம், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் பால்மா ஆகிய பொருட்களின் விலை அதிகரிப்பின் முக்கிய காரணமாக இறக்குமதிகள் துணைத்துறை 25 சதவீதமளவில் அதிகரித்தது. இத்துறை, மொத்த அதிகரிப்பின் 26 சதவீதத்திற்கு வகைகூறியது. நெல், தேங்காய், மீன் மற்றும் மரக்கறிகள் போன்ற உள்நாட்டு உணவுப் பொருட்கள் போக்குவரத்துக் கருவிகள், நீர்ப்பம்பிகள், மற்றும் தையல் பொறிகள் போன்ற பொறி, சீமெந்து மற்றும் குடிவகைகளின் விலை அதிகரிப்பால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு உள்நாட்டுத்துறை சார்பூரீதியில் 13.9 சதவீதமளவான குறைவான வளர்ச்சியைக் கொண்டிருந்தது.

**முடிவுப் பயன்பாட்டு பகுப்பின் கீழ், இவ்வாண்டுக்கான மொத்த அதிகரிப்பில் 75 சதவீதத்துக்கும் கூடுதலான பெருமளவு செல்வாக்கை நுகர்வுப் பொருட்கள் கொண்டிருந்தன.** 75 சதவீதப் பங்கைக் கொண்டுள்ள இத்துணைச் சுட்டெண் பெரும்பாலும் உணவுப் பொருட்களை உள்ளடக்கியுள்ளதுடன், உணவுத் துணைச் சுட்டெண்ணுக்கு மிகவும் ஒத்ததாகச் செயற்பட்டு 28.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இடைநிலைத் தொகுதியில் ஏற்பட்ட 20 சதவீத அதிகரிப்பு போக்குவரத்துக் கருவி (டயர்கள் மற்றும் தன்னியக்க மின்கலங்கள்) வளமாக்கி, பாதணி, மின்சாதனப் பொருட்கள் (உலர் மின் கலங்கள், மின்விசிறி, ஆளிகள், காப்பிடப்பட்ட கம்பிகள் குளிச்சாதனப் பெட்டிகள்) மற்றும் புகையிலை, கொக்கோ போன்ற சிறு வேளாண்மை ஏற்றுமதிப்பொருட்களின் விலை அதிகரிப்புக்களின் விளைவால் ஏற்பட்டதாகும். இதேவேளை, இம்மூன்று தொகுதிகளினுள் ஆகக் குறைந்த பங்கைக் கொண்டிருக்கும் முதலீட்டுப் பொருட்கள் சுட்டெண்மீது மிகச்சிறியளவிலான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில், சிமெந்து. செங்கட்டிகள், கல்நார்த்தகடுகள், தீந்தை, பிளாத்திக் குழாய்கள் மற்றும்

**அட்டவணை 4.4 மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும் துறை ரீதியான சுருக்கியும்**

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 (அ) | 2006/2005 | 2007/2006 (அ) |
| வேளாண்மை | 198.7 | 214.8 | 261.1 | 8.1 | 21.6 |
| கைத்தொழில் | 214.1 | 240.8 | 266.1 | 12.5 | 10.5 |
| பணிகள் | 195.8 | 217.9 | 249.1 | 11.3 | 14.3 |
| மொ.உ.உ | 202.1 | 224.9 | 256.3 | 11.3 | 14.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபர திணைக்களம்

தாது, உருக்கு என்பன இவ்வபிவிருத்திக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்தன. ஆசியப் பிராந்தியத்தில் கட்டடவாக்கக் கைத்தொழிலில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியுடன் இணைந்து சீமெந்து மற்றும் சூளைக்கற்களுக்கு ஏற்பட்ட பிராந்திய பற்றாக்குறை காரணமாக இவ்வாண்டில் சீமெந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனினும், சீமெந்தை அத்தியாவசியமான பொருளாக தீர்மானிக்கும் அரசின் கொள்கை காரணமாக, சீமெந்து விலையிலான அதிகரிப்பு இவ்வாண்டில் கட்டுப்படுத்தப்பட்டது.

### மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி (மொ.உ.உ.சுருக்கி)

**மொ.உ.உ சுருக்கியால் அளவிடப்பட்டவாறு 2007இல் பொருளாதாரத்திலான பொதுவான விலை மாற்றம் 2006இல் பதிவு செய்யப்பட்ட 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் உயர்ந்தது.** கடந்த ஆண்டின் குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் வேளாண்மைத்துறை சார்பு ரீதியில் 21.6 சதவீதம் கொண்ட உயர் பணவீக்க வீதத்தைப் பதிவு செய்தது. 2006இன் 11.3 சதவீதத்திலிருந்து 2007இல் 14.3 சதவீதத்துக்கு மேலும் உயர்ந்த பணிகள் துறையின் பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் போக்கைத் தொடர்ந்ததுடன் வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத் துறைகள் முக்கிய பங்களிப்பாளர்களாக விளங்கின. 2006இன் 12.5 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 10.5 சதவீதத்துக்கு மெதுவடைந்த கைத்தொழில் துறையின் ஆகக் குறைந்த பணவீக்கம் முக்கியமாக தயாரிப்புத்துறை விலைகளில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியால் ஏற்பட்டதாகும்.

## 4.3 கூலிகள்

**தொழிலாளரின் தொழில் அந்தஸ்துப்படி தொழிற் சந்தையில் கூலியைச் சம்பாதிப்போர், கூலியைச் சம்பாதிக்காதோர் என இரண்டு வகையானவர்கள் தொழிற்சந்தையில் காணப்படுகின்றனர்.** கூலிகள் மீதான விருத்திகள் நுகர்வோர் விலைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளன. எனவே, கூலிகளிலான விருத்திகளை மதிப்பிடல் காத்திரமான கொள்கை வகுத்தலுக்கான முக்கிய உள்ளீடாக விளங்குகின்றது. கூலிகளில் ஏற்படும் அசைவுகள் கூலிவீதச் சுட்டெண்ணின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

**இலங்கையில் கூலிகள் அரசதுறை மற்றும் தனியார்துறை என்ற இரண்டு முக்கிய தொழில்நிலை வகைகளின் கீழ் பகுப்பாய்வு செய்யப்படலாம்.** அரசதுறை, அரசு மற்றும் அரசுசார் துறைகளை உள்ளடக்கியிருக்கையில் தனியார்துறை முறைசார் மற்றும் முறைசாரா துறைகளை உள்ளடக்கியுள்ளது. அரச துறையிலுள்ள கூலி விருத்திகள் மத்திய அரசிலுள்ள நிறைவேற்றுத்தரமல்லாத தரங்கள் மற்றும் சிற்றூழியர்களையும், அரச பாடசாலை ஆசிரியர்களையும் உள்ளடக்கி மத்திய வங்கியால் தொகுக்கப்படும் கூலிச் சுட்டெண்களுடாகவும், முறைசார் தனியார்துறையிலுள்ளோரின் கூலி அபிவிருத்திகள், வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம், மற்றும் பணிகள் துறைகளுக்காக தொழில்திணைக்களத்தால் தொகுக்கப்படும் கூலிவீதச் சுட்டெண்களின் அடிப்படையிலும் கண்காணிக்கப்படுகிறது. முறைசாராத்துறையில் கூலிகளின் அசைவுகள், மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையிலிருந்து சேகரிக்கப்பட்ட கூலித் தகவலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### அரசதுறைக் கூலிகள்[2]

**அரசின் 2006 வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளைத் தொடர்ந்து அரசதுறை ஊழியர்கள் 2007இல் கணிசமான கூலி அதிகரிப்பைப் பெற்றனர்.** இவ் அதிகரிப்பு முக்கியமாக

2. அரசதுறை இரண்டு துணைத்துறைகளை அதாவது அரசு (மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள்) மற்றும் அரசசார் (அரச கூட்டுத்தபானங்கள், சபைகள், அதிகாரசபைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள்) துறைகளை உள்ளடக்கியுள்ளன.

**அட்டவணை 4.5 கூலிவீதச் சுட்டெண்கள்**

(திசெம்பர் 1978=100)

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | | உண்மையான | | | பெயரளவு | | | உண்மையான | | |
| | 2005 | 2006 | 2007(அ) | 2005 | 2006 | 2007(அ) | 2005 | 2006 | 2007(அ) | 2005 | 2006 | 2007(அ) |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 2,417.5 | 3,150.8 | 3,828.4 | 142.7 | 164.0 | 169.5 | 29.1 | 30.3 | 21.5 | 15.8 | 14.9 | 3.4 |
| நிறைவேற்றுத்தரமல்லா | 2,178.4 | 2,853.8 | 3,493.4 | 128.6 | 148.5 | 154.7 | 27.5 | 31.0 | 22.4 | 14.3 | 15.5 | 4.1 |
| சிற்றூழியர்கள் | 2,672.4 | 3,463.0 | 4,172.7 | 157.8 | 180.2 | 184.8 | 31.0 | 29.6 | 20.5 | 17.5 | 14.2 | 2.5 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 1,818.6 | 2,304.2 | 2,740.0 | 107.4 | 119.9 | 121.4 | 27.3 | 26.7 | 18.9 | 14.1 | 11.7 | 1.2 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள கூலிநிர்ணயசபை | 1,329.7 | 1,358.2 | 1,648.8 | 78.5 | 70.7 | 72.7 | 7.8 | 2.1 | 21.4 | -3.5 | -9.9 | 2.7 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1,527.4 | 1,567.1 | 1,821.4 | 90.2 | 81.6 | 80.3 | 9.3 | 2.6 | 16.2 | -2.3 | -9.5 | -1.6 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 1,078.4 | 1,090.7 | 1,522.4 | 63.7 | 56.8 | 67.0 | 3.3 | 1.1 | 39.6 | -7.6 | -10.8 | 18.0 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 779.7 | 779.7 | 1,057.1 | 46.0 | 40.6 | 46.5 | 3.8 | 0.0 | 35.6 | -7.0 | -11.8 | 14.5 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

புதிய சம்பளத் திட்டத்தின் எஞ்சிய 50 சதவீதக் கொடுப்பனவு (2006 சனவரி 1 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய சம்பள அளவுகளுக்கும் திசெம்பர் 2005இல் செலுத்தப்பட்ட சகல படிகளையும் உள்ளடக்கிய சம்பளங்களுக்கும் இடையேயான வித்தியாசத்தின் அடிப்படையில்) மற்றும் வாழ்க்கைச் செலவுப்படியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றினால் ஏற்பட்டது. இத்திருத்தத்தின்படி, ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஆகக்கூடிய மேல் நோக்கிய திருத்தமான ரூ.375 இற்கு உட்பட்டு, 2006 சனவரியில் அரசதுறை ஊழியர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.1,000 கொண்ட வாழ்க்கைப்படி வழங்கப்பட்டது. இதன்படி, இது 2007 சனவரியின் ரூ.1,750 இலிருந்து 2007 யூலை 1 இல் ரூ.2,125 இற்கு உயர்வடைந்தது. நிறைவேற்றுத் தரமல்லாத ஊழியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களுக்கான கூலி வீதச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு அரசதுறைக் கூலிகளின் இவ் அதிகரிப்பு, அரசதுறை ஊழியர்களின் சகல வகைகளினதும் பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் இரண்டிலும் சாதகமான விளைவைக் கொண்டிருந்தது. எனினும் 2007இல் பெயரளவு மற்றும் உண்மைக் கூலி அதிகரிப்புக்கள் ஆகிய இரண்டும் 2006ஐ விட குறைவாகக் காணப்பட்டன.

**மேற்கூறிய சம்பள திருத்தங்களுக்கு மேலதிகமாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவி ஒதுக்கு ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில் (2006 ஓகத்து 24ஆம் நாளிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 (IV) மூத்த மட்டத்திலான தொகுதியினரை விட ஏனைய அரச அலுவலர்களின் சம்பள அளவுகளை 2007 யூன் 1 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் திருத்துவதற்கும் அரசு தீர்மானித்தது.** இச் சகல திருத்தங்களினதும் விளைவாக 2007ஆம் ஆண்டுக்கான மத்திய அரச ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது 2007இல் நிறைவேற்றுத் தரமல்லாத அலுவலர்கள் (22.4 சதவீதத்தால்) மற்றும் சிற்றூழியர்களின் (20.5 சதவீதத்தால்) பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் இணைந்த விளைவால் ஏற்பட்டது. அரச பாடசாலை ஆசிரியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்ணும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ் அதிகரிப்புக்கள் பணவீக்கத்துக்கு சீராக்கம் செய்யப்பட்டபோது வெவ்வேறான வகைகளுக்கான உண்மைக் கூலிகளில் 1-4 சதவீத வீச்சிலான அதிகரிப்புகளுக்கு இட்டுச் சென்றன. இந் நன்மை முன்னைய ஆண்டில் அரசதுறை ஊழியர்கள் நன்மையடைந்த 12-16 சதவீத உச்ச வீச்சிலான உண்மைக் கூலி அதிகரிப்புக்களுடன் ஒப்பிடத்தக்கது.

## முறைசார்ந்த தனியார்துறைக் கூலிகள்[3]

**முறைசார்ந்த தனியார்துறை ஊழியர்களின் கூலிகள் தொழில்தருநர்கள், தொழிலாளர்கள் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பினரையும் கொண்ட கூலிச்சபை வர்த்தகங்களின் கீழ்வரும் ஒழுங்குவிதிகளின் மூலம் ஆளுகைப்படுத்தப்படுறது.** அவ்வாறே, முறைசார்ந்த தனியார் துறையிலான கூலி அதிகரிப்புக்கள் தனிப்பட்ட ஒப்பந்தங்கள், கூட்டு ஒப்பந்தங்கள், தொழில்தருநர்களால் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான தீர்மானங்கள் மற்றும் கூலி நிர்ணயச் சபைகளின் ஆகக் குறைந்த கூலித் தீர்மானங்களால் செல்வாக்குச் செலுத்தப்பட்டன. இக் கூலிகளின் அசைவுகள், இச் சபைகளால் ஆளுகைப்படுத்தப்படும் ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலி வகைகளை மட்டுமே உள்ளடக்கும் ஆகக்குறைந்த கூலிவீதச் சுட்டெண்களூடாக கண்காணிக்கப்படுகின்றன.

**வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம், மற்றும் பணிகள் ஆகிய முறைசார் தனியார் துறையின் மூன்று முக்கிய தொழில்நிலை வகைகளிலான பெயரளவுக் கூலிகள் ஆகக்குறைந்த கூலி வீதச் சுட்டெண்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு முறையே 16 சதவீதம், 40 சதவீதம், மற்றும் 36 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் முழுத்துறைக்குமான பொதுவான சுட்டெண் 21 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் முன்னைய ஆண்டின் 2 சதவீதம் கொண்ட சிறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இது கணிசமான முன்னேற்றமாகும்.** இதன் விளைவாக, இவ் ஊழியர்கள் 2006இல் 10 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி இழப்புடன் ஒப்பிடுகையில் 2007இல் சராசரியாக 2.7 சதவீதம் கொண்ட உண்மைக்கூலி அதிகரிப்பைப் பெற்றனர். எனினும், வேளாண்மைத்துறை ஊழியர்கள் 2007இல் மேலும் 1.6 சதவீதம் கொண்ட சிறிய உண்மைக்கூலி இழப்பால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகினர், கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை, மற்றும் பணிகள் துறையிலுள்ள ஊழியர்கள் 2006இல் அடைந்த 11 - 12 சதவீத இழப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 18 சதவீதம் மற்றும் 16 சதவீத உண்மைக் கூலி வீத அதிகரிப்புக்களைப் பெற்றனர். பொதுவாக, இவை, இத்துறைகளிலுள்ள நிறைவேற்றுத்-தரத்திலுள்ள அலுவலர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர் வகுப்புக்களால் உழைக்கப்படும் கூலிகளை உள்ளடக்கமாட்டாததால், நிலைமை, ஆகக் குறைந்த கூலிவீதச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டதைவிட வேறுபட்டதொன்றாக இருக்கக்கூடும்.

**2007இல் பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் 2007 மே 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிலாளர்களுக்கான (மாதாந்தச் சம்பளத்தைப் பெறுபவரும், கூலிகள் நிர்ணயச்சபை வர்த்தகங்களால் ஆளுகைப்படுத்தப் படுபவர்களும்) ஆகக் குறைந்த கூலிகளை ரூ.5,000 இற்கு அதிகரித்தமையாலும் 2006 திசெம்பர் 19இல் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கிடையிலான கூட்டு ஒப்பந்தத்தை கூலி நிர்ணயச்சபை வர்த்தகங்களால் ஆளுகைப்படுத்தப்படும் தேயிலை மற்றும் இறப்பர் வளர்த்தல் மற்றும் தயாரிப்பு வர்த்தகங்களில் ஈடுபடும் சகல ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டமையாலும் ஏற்பட்டது.** இது தேயிலை, மற்றும் இறப்பர் வளர்த்தல் மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திலுள்ள அவ்வாறான ஊழியர்கள் பெருந்தோட்டக் கம்பனிகளில் உள்ளவர்களைப் போலவே ரூ.260 நாளாந்த சம்பளப் பொதியை 2007 யூன் 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெறுவதற்கு இயலச் செய்தது. இதன்

3. ஊழியர் சேம நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் அல்லது தொழில் ஆணையாளரின் ஒப்புதலுடன் அவர்களது சொந்த நிதியங்களைப் பேணும் (ஏதாவது அவ்வாறான பங்களிப்பு ஓய்வூதிய நன்மையளிக்கும் திட்டம்) தனியார்துறை நிறுவனங்களை உள்ளடக்கும் துறையாக முறைசார் தனியார்துறை விவைிலக்க-ணப்படுத்தப்பட்டுள்ளது.

விளைவாக கூலி நிர்ணயச்சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின் ஆகக்குறைந்த கூலி வீதச் சுட்டெண்கள் 2007 மேயிலும், யூனிலும் அதிகரித்தன.

## முறைசாராத் தனியார்துறைக் கூலிகள்

**முறைசாராத் தனியார்துறையானது அரசதுறை மற்றும் முறைசார் தனியார்துறைக்கு வெளியேயுள்ள சகல ஊழியர்களையும் உள்ளடக்குகிறது.** அவர்கள் தொழில் ஆணையாளருடன் பதிவு செய்யப்படாமையால் எந்தவொரு முறைசார்ந்த ஓய்வூதிய நன்மையளிக்கும் திட்டத்திலும் உள்ளடக்கப்படவில்லை. முறைசாராத தனியார் துறையில் பெயரளவுக் கூலிகள் கூடியளவுக்கு சுதந்திரமான சந்தைச் சூழலில் தீர்மானிக்கப்படுகின்றன. வேளாண்மை மற்றும் கட்டடவாக்கம் சம்பந்தமான இத்துறையில் கூலித் தகவல்கள் மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்படுகின்றன.

**இத்துறைகளின் நாளாந்தக் கூலிகள் மீதான தகவல் பெயரளவு நியதிகளில் வெவ்வேறு வீதங்களில் மேல்நோக்கிய அசைவை வெளிப்படுத்தியிருக்கையில் உண்மை நியதிகளில் வீழ்ச்சியைப் பதிவு செய்தன.** இதன்படி, தெங்குத் துறைக்கான பெயரளவு நாளாந்த கூலிகள் ஆகக் கூடிய அதிகரிப்பான 16.4 சதவீதத்தைக் காட்டிய வேளையில் தேயிலை, இறப்பர் மற்றும் நெற்றுறைகளுக்கான இக் கூலிகள் 11 -16 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. வேளாண்மைத் துறையினுள் அநேகமான துணை வகைகளின் நாளாந்த கூலிகளின் அதிகரிப்பு வீதங்கள், வெவ்வேறான செயற்பாடுகளிடையேயான பன்முகப்படுத்தல் காரணமாக ஓரளவு வேறுபட்டிருந்தது. தெங்குத் துறையில் நாளாந்தக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, இவ்வாண்டில் தேங்காய்க்கான உயர் விலைகளுடன் இணைந்து செல்லும் வகையில் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உயர் கூலிகளுக்கான கேள்வியால் பெரும்பாலும் உந்தப்பட்டதாகும். உயர் உற்பத்தியாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட சாதகமான விலைகளாலும் இறப்பர்த்துறையின் நாளாந்தக் கூலிகள் அதிகரித்தன. தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சிக்கு மத்தியிலும், உலக சந்தையில் நிலவிய சாதகமான விலைகளால் தேயிலைத் தொழிலாளர்களுக்கும் உயர் கூலிகள் செலுத்தப்பட்டன.

**வெளிநாட்டுத் தொழிலுக்காக கொத்தனார் மற்றும் தச்சுத் தொழிலாளர்கள் குடிபெயர்ந்தமையின் காரணமாக அவ்வாறான தொழிலாளர்களுக்கான பற்றாக் குறைகளுடன் இணைந்து கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்கான தொழிலாளர்களுக்கு காணப்பட்ட தொடர்ச்சியான கேள்வியால் கட்டடவாக்கத்துறையிலுள்ள கொத்தனார் மற்றும் தச்சுத் தொழிலாளர்களுக்கான நாளாந்தக் கூலிகள் 14 - 16 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.** எனினும், பணவீக்கத்துக்காக சீராக்கப்பட்டபோது அவர்களின் உண்மைக் கூலிகள் இவ்வாண்டில் 1.5 - 3.0 சதவீத வீச்சினுள் வீழ்ச்சியடைந்தன. இதன்படி, கடந்த ஆண்டில் அவதானிக்கப்பட்டவாறு, வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத்துறை ஊழியர்கள் இருபாலாரும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2007இல் அவர்களின் உண்மைக் கூலிகளில் இழப்புக்களை அடைந்தனர்.

### அட்டவணை 4.6 துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் (அ)

| துறை | ஆண்டுச்சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான | |
| | 2005 | 2006 | 2007 (ஆ) | 2006 | 2007 (ஆ) | 2006 | 2007 (ஆ) |
| **1. வேளாண்மைத்துறை** | | | | | | | |
| **தேயிலை** | | | | | | | |
| ஆண் | 300 | 333 | 378 | 10.9 | 13.8 | -2.8 | -3.7 |
| பெண் | 217 | 234 | 261 | 7.9 | 11.5 | -5.8 | -6.0 |
| **இறப்பர்** | | | | | | | |
| ஆண் | 305 | 335 | 384 | 9.7 | 14.6 | -4.0 | -2.9 |
| பெண் | 230 | 249 | 279 | 8.5 | 12.1 | -5.2 | -5.4 |
| **தெங்கு (இ)** | | | | | | | |
| ஆண் | 387 | 421 | 490 | 8.6 | 16.4 | -5.1 | -1.1 |
| **நெல்** | | | | | | | |
| ஆண் | 361 | 391 | 453 | 8.4 | 15.8 | -5.3 | -1.7 |
| பெண் | 261 | 293 | 331 | 12.3 | 13.1 | -1.4 | -4.4 |
| **2. கட்டடவாக்கத்துறை (இ,ஈ)** | | | | | | | |
| **மரவேலையாளர்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாளர் - ஆண் | 556 | 633 | 732 | 13.9 | 15.6 | -0.2 | -1.9 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 368 | 415 | 479 | 12.9 | 15.2 | -0.8 | -2.3 |
| **கொத்தனார்** | | | | | | | |
| முதன்மை கொத்தனார் - ஆண் | 553 | 628 | 727 | 13.6 | 15.8 | -0.1 | -1.7 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 369 | 413 | 474 | 12.1 | 14.6 | -1.6 | -2.9 |

(அ) கூலித்தகவல்கள் 93 நிலையங்களிலிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) தெங்கு மற்றும் நிருமாணத்துறைகளில் பெண் பற்கேற்பு குறைவாகும்
(ஈ) திருத்தப்பட்ட தரவு

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.7 மாவட்ட அடிப்படையில் குடித்தொகை**

'000 ஆட்கள்

| மாவட்டம் | 2006 | 2007(அ) | மாற்றம் (அ) | சதவீத மாற்றம் (அ) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,421 | 2,456 | 35 | 1.4 |
| கண்டி | 1,361 | 1,380 | 19 | 1.4 |
| இரத்தினபுரி | 1,073 | 1,086 | 13 | 1.2 |
| பதுளை | 837 | 850 | 13 | 1.6 |
| குருநாகல் | 1,511 | 1,524 | 13 | 0.9 |
| கம்பகா | 2,125 | 2,140 | 15 | 0.7 |
| காலி | 1,040 | 1,052 | 12 | 1.2 |
| அநுராதபுரம் | 791 | 801 | 10 | 1.3 |
| களுத்துறை | 1,102 | 1,111 | 9 | 0.8 |
| மாத்தறை | 804 | 813 | 9 | 1.1 |
| நுவரெலியா | 735 | 742 | 7 | 1.0 |
| அம்பாறை | 627 | 615 | -12 | -1.9 |
| மட்டக்களப்பு | 556 | 523 | -33 | -5.9 |
| புத்தளம் | 745 | 752 | 7 | 0.9 |
| யாழ்ப்பாணம் | 595 | 599 | 4 | 0.7 |
| மாத்தளை | 471 | 477 | 6 | 1.3 |
| திருகோணமலை | 395 | 355 | -40 | -10.1 |
| அம்பாந்தோட்டை | 547 | 552 | 5 | 0.9 |
| மொனராகலை | 420 | 425 | 5 | 1.2 |
| பொலனறுவை | 382 | 395 | 13 | 3.4 |
| முல்லைத்தீவு | 145 | 147 | 2 | 1.4 |
| கிளிநொச்சி | 142 | 146 | 4 | 2.8 |
| வவுனியா | 164 | 166 | 2 | 1.2 |
| கேகாலை | 797 | 802 | 5 | 0.6 |
| மன்னார் | 100 | 101 | 1 | 1.0 |
| மொத்தம் | 19,886 | 20,010 | 124 | 0.6 |

(அ) தற்காலிகமானவை


மூலம் : பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2007இல் நடுவாண்டுக் குடித்தொகை 20.0 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2006இன் 1.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீத அதிகரிப்பாகும்.** அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை தவிர்ந்த சகல மாவட்டங்களும் குடித்தொகையின் விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன. இம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளால் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக, அம் மாவட்டங்களில் வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன. கொழும்பு, கண்டி மற்றும் கம்பகா மாவட்டங்களின் குடித்தொகையின் உயர் அதிகரிப்புக்கள் மொத்த வளர்ச்சியின் 56 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

**வரைபடம் சி.கு. 4.2 தொழிற்படை மற்றும் வேலைவாய்ப்பின்மையின் போக்கு 2003 - 2007**




### தொழிற்படை

**பொருளாதார ரீதியில் தீவிர பங்கேங்கும் 10 வயதுக்கும் அதற்குக் கூடிய வயதுடையோரைத் தொழிற்படை உள்ளடக்கியுள்ளது.** இது 1990 இலிருந்து தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீடுகளால் அளவிடப்படுகிறது. 2006 மற்றும் 2007 இரு ஆண்டுகளிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அங்கு நிலவும் நிலைமைகளின் காரணமாக அளவீடுகளில் உள்ளடக்கப்படவில்லையாகையால் சில மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் நம்பகமான மதிப்பீடுகளைத்தர போதுமானவையாக இல்லை.

**வேலையற்ற ஆட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக, தொழிற்படை 2006இன் 7.6 மில்லியனிலிருந்து 2007இல் 7.5 மில்லியனுக்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** 10வயதுக்கும் அதற்கும் கூடிய மொத்தக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமான தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2006இன் 51.2 சதவீதத்திலிருந்து 2007இல் 49.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2007 இற்கான ஆண் மற்றும் பெண்ணின் தொழிற்படை பங்கேற்பு விகிதம் முறையே 68 சதவீதமாகவும், 34 சதவீதமாகவும் விளங்கியது.

**அட்டவணை 4.8 குடும்ப அலகுகளின் குடித்தொகை தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2005(ஆ) | 2006 | 2007 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கானது |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (இ) '000 ஆட்கள் | 14,838 | 14,834 | 15,007 | 15,029 | 15,006 | 15,150 | 15,048 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 7,312 | 7,599 | 7,471 | 7,362 | 7,526 | 7,598 | 7,489 |
| தொழிலில் உள்ளோர் | 6,788 | 7,105 | 7,008 | 6,880 | 7,102 | 7,177 | 7,042 |
| தொழில் அற்றோர் | 524 | 493 | 462 | 482 | 423 | 421 | 447 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) சதவீதம் | 49.3 | 51.2 | 49.8 | 49.0 | 50.2 | 50.1 | 49.8 |
| ஆண் | 67.3 | 68.1 | 68.1 | 66.5 | 68.4 | 68.2 | 67.8 |
| பெண் | 32.6 | 35.7 | 33.2 | 32.7 | 33.8 | 33.7 | 33.4 |

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஆ) 2005 ஒகத்தில் ஒரே ஒரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
(இ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
(ஈ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரைக் கொண்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்.

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.9 பொருளாதார நடவடிக்கைகளின்படி தொழில் நிலை (அ)**

| துறை | '000 ஆட்கள் | | | | | | | மொத்த தொழில் நிலையின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2007 | | | | | | | |
| | 2005 (ஆ) | 2006 | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக் கானது | 2005 | 2006 | 2007 |
| **வேளாண்மை** | 2,059 | 2,287 | 2,234 | 2,079 | 2,129 | 2,366 | 2,202 | 30.3 | 32.2 | 31.3 |
| **கைத்தொழில்** | 1,787 | 1890 | 1,890 | 1,851 | 1,920 | 1,835 | 1,874 | 26.3 | 26.6 | 26.6 |
| தயாரிப்பு | 1,293 | 1,363 | 1,300 | 1,323 | 1,333 | 1,369 | 1,331 | 19.0 | 19.2 | 18.9 |
| கட்டடவாக்கம் (இ) | 494 | 527 | 589 | 527 | 587 | 466 | 543 | 7.3 | 7.4 | 7.7 |
| **பணிகள்** | 2,941 | 2,928 | 2,884 | 2,950 | 3,053 | 2976 | 2,966 | 43.3 | 41.2 | 42.1 |
| வர்த்தகம் உணவகங்கள் முதலியன | 932 | 1,084 | 1,002 | 1,074 | 1,056 | 1,070 | 1,051 | 13.7 | 15.3 | 14.9 |
| போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 448 | 430 | 459 | 447 | 471 | 450 | 457 | 6.6 | 6.1 | 6.5 |
| நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 226 | 221 | 243 | 206 | 212 | 200 | 215 | 3.3 | 3.1 | 3.1 |
| தனிப்பட்ட பணிகள்மற்றும் ஏனையவை | 1,335 | 1,192 | 1,180 | 1,223 | 1,314 | 1,256 | 1,243 | 19.7 | 16.8 | 17.7 |
| **மொத்தத் தொழில் வாய்ப்பு** | 6,788 | 7105 | 7,008 | 6,880 | 7,102 | 7,177 | 7,042 | 100.0 | 100.0 | 100.0 |
| தொழிற்படையின் சதவீதம் | 92.8 | 93.5 | 93.8 | 93.5 | 94.4 | 94.5 | 94.0 | | | |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஆ) 2005 ஓகத்தில் ஒரே ஒரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
(இ) சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் என்பன கட்டடவாக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## தொழில் நிலை

**காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி 2007இல் தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கை 2006இன் 7.1 மில்லியனின் ஒப்பிடுகையில் 2007இல் 7.0 மில்லியனாக விளங்கி சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. இது 2007இன் முதல் இரண்டு காலாண்டுகளில் தொழில்நிலையில் எற்பட்ட வீழ்ச்சியால் உந்தப்பட்டதுடன் இவ்வாண்டின் பிற்பகுதியில் அதிகரிக்க தொடங்கி 2007இன் நான்காம் காலாண்டில் 7.2 மில்லியனைப் பதிவு செய்தது.** அளவீட்டுக் காலப்பகுதியில் சம்பளம் செலுத்தப்பட்ட ஊழியர்களாக பணிபுரிந்த ஆட்கள், தொழில் தருநர்கள், சொந்தத்தொழில் புரிவோர் (சுயதொழில் புரிவோர்) அல்லது கூலி செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர்கள் காலாண்டு தொழிற்படை அளவீட்டில் தொழில்புரியும் ஆட்களாகக் கருதப்படுவர், இது அளவீட்டுக் காலப்பகுதியில் தொழிலில் ஈடுபடாத போதிலும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆட்களையும் உள்ளடக்குகிறது. சுகயீனம், மோசமான வானிலை அல்லது தொழிலாளர் பிணக்குகள் காரணமாக தற்காலிகமாக தொழிலுக்குச் செல்லாத ஊழியர்களும் தொழில்புரிபவர்களாகவே கருதப்படுவர்.

**வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளில் உள்ள தொழில் நிலையில் வீழ்ச்சி காணப்பட்டது. எனினும், இவ்வீழ்ச்சி பெரும்பாலும் இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் பிரதிபலிக்கப் பட்டதுடன், இதன்பின்பு இவ்வாண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் மீட்சியடைந்தது.** கைத்தொழில் துறையில் தொழில்நிலை 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை, குறிப்பிடத்தக்க உற்பத்தித்திறன் மேம்பாடுகளைப் பிரதிபலிக்கும் தயாரிப்பு துறையிலான உயர் பெறுமதி கூட்டலுக்கு மத்தியிலும், இத்துறையிலான குறைந்தளவு தொழில் நிலையால் ஏற்பட்டது. இதே வேளை, வேளாண்மை துறையின் தொழில்நிலையில் ஏற்பட்ட 3.7 சதவீத வீழ்ச்சி 2007இல் இரண்டாம் காலாண்டில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். இவ்வீழச்சிகள் பணித்துறை தொழில்நிலையில் ஏற்ப்பட்ட 1.3 சதவீத அதிகரிப்பின் நேர்க்கணிய தாக்கத்தை போதுமானளவில் ஈடுசெய்யப் போதுமானது.

**அட்டவணை 4.10 தொழில்நிலை தகைமை (அ)**

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர் | சுய வேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2005 (ஆ) | 13.2 | 46.2 | 2.8 | 29.7 | 8.1 | 100.0 |
| 2006 | 13.4 | 42.1 | 3.1 | 30.8 | 10.5 | 100.0 |
| 2007 (ஆண்டு) | 13.8 | 42.7 | 2.8 | 30.4 | 10.3 | 100.0 |
| 1ஆம் காலாண்டு | 12.6 | 44.1 | 3.0 | 30.2 | 10.1 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 13.5 | 42.6 | 3.3 | 30.3 | 10.3 | 100.0 |
| 3ஆம் காலாண்டு | 15.0 | 41.5 | 2.6 | 30.9 | 10.0 | 100.0 |
| 4ஆம் காலாண்டு | 13.8 | 42.7 | 2.5 | 30.2 | 10.8 | 100.0 |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களின் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(ஆ) 2005 ஓகத்தில் ஒரேயொரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.11 அரசதுறை தொழில் நிலை**

| துறை | 2005 | 2006 | 2007(அ) | சதவீத மாற்றம் 2006/ 2005 | சதவீத மாற்றம் 2007/ 2006(அ) |
|---|---|---|---|---|---|
| அரசு (ஆ) | 850,321 | 887,674 | 937,494 | 4.4 | 5.6 |
| அரசுசார் (இ) | 253,922 | 258,049 | 259,116 | 1.6 | 0.4 |
| அரசதுறை | 1,104,243 | 1,145,723 | 1,196,610 | 3.8 | 4.4 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ) அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள், அரச மேலாண்மைச் சபைகள் போன்றவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.12** **தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்) (அ)**

| வகை | 2005 (ஆ) | 2006 | 2007 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | ஆண்டுக்கானது |
| **அனைத்து** | 7.2 | 6.5 | 6.2 | 6.5 | 5.6 | 5.5 | 6.0 |
| **பால் வகைப்படி** | | | | | | | |
| ஆண் | 5.3 | 4.7 | 4.4 | 4.6 | 4.1 | 4.2 | 4.3 |
| பெண் | 10.7 | 9.7 | 9.5 | 10.3 | 8.5 | 8.0 | 9.0 |
| **வயது அடிப்படையில்** | | | | | | | |
| 15 - 19 | 33.2 | 23.1 | 18.9 | 24.6 | 25.4 | 17.0 | 21.6 |
| 20 - 29 | 16.0 | 15.9 | 15.2 | 16.2 | 14.0 | 14.8 | 15.0 |
| 30 - 39 | 3.5 | 3.3 | 3.6 | 3.7 | 2.7 | 3.4 | 3.3 |
| 40 உம் அதற்கு மேல் | 2.4 | 1.4 | 1.6 | 1.3 | 0.9 | 1.3 | 1.3 |
| **கல்விமட்ட அடிப்படையில்** | | | | | | | |
| வகுப்பு 4/ ஆண்டு 5 | ... | ... | 1.4 | 1.6 | ... | ... | 1.3 |
| அதற்குக்கீழ் வகுப்பு 5-9/ 6-10ஆண்டு | 6.1 | 5.8 | 5.6 | 5.3 | 5.2 | 4.5 | 5.2 |
| க.பொ.த (சா.த)/ பொ.க.தே.சா | 10.6 | 9.9 | 8.3 | 9.5 | 7.1 | 8.1 | 8.2 |
| க.பொ.த (உ..த)/ தே.க.பொ.த.ப | 12.2 | 11.6 | 12.3 | 13.0 | 10.5 | 11.3 | 11.8 |

(அ) தரவுகளில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.
(ஆ) 2005 ஒகத்தில் ஒரேயொரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, அரசதுறை **தொழில்நிலையின் பங்கு, படைகள் மற்றும் பொலிஸ் பணியிலான விரிவாக்கத்தின் முக்கிய காரணமாக 2006இன் 13.4 சதவீதத்திலிருந்து 2007 ஆம் மூன்றாம் காலாண்டில் 13.8 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் தனியார்துறை தொழில்நிலையின் பங்கு 2006இன் 42.1 சதவீதத்திலிருந்து 2007இல் 42.7 சதவீதத்துக்கு அதிகரித்தது.** ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அரசதுறை தொழில்நிலையிலான விரிவாக்கமும் மத்திய வங்கியால் நடாத்தப்படும் வருடாந்த அரசதுறை தொழில்நிலை அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்டது.

## தொழில்வாய்ப்பின்மை

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி, **தொழிலின்மை வீதம் 2006இல் பதிவு செய்யப்பட்ட 6.5 சதவீதத்திலிருந்து 2007இன் நாலாம் காலாண்டில் முன்னெப்பொழுதுமில்லாத ஆகக் குறைந்தளவான 5.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்ததுடன் 2007இல் வருடாந்த வீதம் 6.0 வீதத்துக்கு தொடர்ச்சியான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** இது 2007இல் பொருளாதாரத்தின் சகல மூன்று துறைகளிலும் ஏற்பட்ட செழிப்பான வளர்ச்சியுடன் இணைந்து காணப்பட்டது. அரச மற்றும் தனியார்துறை இரண்டிலும் தொழில் உருவாக்கத்துக்கான பல நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல், தொழிற் சந்தைத் தகவலை பரப்புதல் மற்றும் தொழில் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன தொழில்வாய்ப்பின்மை வீதத்தைத் தொடர்ந்து குறைத்தன.

**எனினும், இளம் வயதுத் தொகுதியினரிடையேயான தொழில்வாய்ப்பின்மை சார்பு ரீதியில் உயர்ந்து காணப்பட்டது.** குறிப்பாக 15 - 19 வயதுத் தொகுதியினரிடையேயான இளைஞர், தொழில்வாய்ப்பின்மை 2006 இன் 23.1 சதவீதத்திலிருந்து 2007இல் 21.6 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் எஞ்சிய வயதுத் தொகுதியினர் இடையேயான தொழில்வாய்ப்பின்மை 2006 உடன்

**அட்டவணை 4.13** **வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு**

| தொழில்நிலை | 2005 | | 2006 | | 2007 (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **தொழிலில் உள்ளோர்** | 231,290 | 100.0 | 201,948 | 100.0 | 217,306 | 100.0 |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 165,707 | 71.6 | 141,177 | 69.9 | 146,031 | 67.2 |
| ஏனையோர் | 65,583 | 28.4 | 60,771 | 30.1 | 71,275 | 32.8 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண்கள் | 93,896 | 40.6 | 90,170 | 44.7 | 102,629 | 47.2 |
| பெண்கள் | 137,394 | 59.4 | 111,778 | 55.3 | 114,677 | 52.8 |
| **மனித வலு வகை** | | | | | | |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 125,493 | 54.3 | 99,659 | 49.3 | 102,176 | 47.0 |
| ஏனையோர் | | | | | | |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 46,688 | 20.2 | 45,063 | 22.3 | 49,609 | 22.8 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 41,904 | 18.1 | 40,705 | 20.2 | 52,191 | 24.0 |
| ஏனையோர் | 17,205 | 7.4 | 16,521 | 8.2 | 13,330 | 6.2 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

ஒப்பிடுகையில் மிகச்சிறிய வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. மேலும், க.பொ.த. (சா.த) தகைமைகளைக் கொண்டிருப்பவர்களிடையேயான தொழிலின்மை வீதம் 9.9 சதவீதத்திலிருந்து 8.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், க.பொ.த (உ.த) மற்றும் உயர் தகைமைகளைக் கொண்டிருப்பவர்களிடையேயான தொழிலின்மை வீதம் 11.6 சதவீதத்திலிருந்து 11.8 சதவீதத்துக்கு அதிகரித்தது.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

**இலங்கைத் தொழிற்படைக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், 2006இல் ஏற்பட்ட தற்காலிகப் பின்னடைவிலிருந்து நன்றாக மீட்சியடைந்து 2007இல் தொழில் நிலையின் முக்கிய மூலமாகத் தொடர்ந்து விளங்கியது.** 2007இல் மொத்த வெளிச் செல்கைகள் 2006இன் 201,948 உடன் ஒப்பிடுகையில் 217,306 ஆக விளங்கி 7.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன்படி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மதிப்பீடுகளின் அடிப்படையில் 2007 இறுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பின் மொத்த இருப்பு 1.6 மில்லியனாக விளங்கியது. இவ்வாண்டுக்கான மொத்த பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2,502 மில்லியனாக விளங்கி, 2006 உடன் ஒப்பிடுகையில் 15 சதவீதமளவான அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது இக் காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையில் குடிபெயர்ந்த தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களினால் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். மொத்த வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் மத்திய கிழக்குப் பிராந்தியம் தொடர்ந்தும் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக பங்களிப்புச் செய்துள்ளது. எனினும், மலேசியாவில் தொழிலாளர்களுடன் இணக்கம் காணப்பட்ட சம்பளங்கள் கொடுக்கப்படாமை மற்றும் தென்கொரியாவிற்கான ஆட்சேர்ப்பு இவ்வாண்டிலிருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் மட்டும் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக மலேசியா மற்றும் தென்கொரியாவில் வழங்கப்பட்ட தொழில்கள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

**வெளிநாட்டு வேலைவாய்புக்கான ஆண்களின் பங்களிப்பு கடந்த ஆண்டுகளில் உறுதியாக அதிகரித்து வருகின்றது.** ஆண் தொழிலாளரின் பங்கு 2006இன் 44 சதவீதத்திலிருந்து 2007இல் 47 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு குறிப்பாக கட்டடவாக்கம் மற்றும் தயாரிப்புத் துறைகளில் கட்டார், சவூதி அரேபியா, ஐக்கியஅரபுக் குடியரசு, மற்றும் ஜோர்டான் நாடுகளில் ஆண்களுக்கான தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழில்களுக்கான உயர் கேள்வியால் ஏற்பட்டது. மறுபக்கத்தில், பணிப் பெண்கள் உள்ளடங்கலான தொழில்களின் குறிப்பிட்ட வகைகளுக்கான போதுமானதற்ற ஊதியத்தின் முக்கிய காரணமாக சவூதி அரேபியா மற்றும் ஓமானுக்கான மொத்த வெளிச் செல்கைகள் பின்னடைவினைக் கண்டதற்கு முக்கிய காரணமாக இருந்தது. குறிப்பாக பணிப்பெண்கள் உள்ளிட்ட பெண்களின் வெளிச் செல்கைகளின் வளர்ச்சி, முக்கியமாக இலங்கையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்களின் கிடைப்பனவு காரணமாக அண்மைய ஆண்டுகளில் மெதுவடைந்தது.

**பணிப் பெண்களை முனைப்பாகக் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பின் கணிசமான பங்கிற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் தொடர்ந்தும் வகைகூறினர்.** எனினும், இச் செல்வாக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பணிப் பெண்களின் பங்கு 2006இன் 49 சதவீதத்திலிருந்து 2007இல் 47 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்ததிலிருந்து கடந்த ஆண்டுகளில் நலிவடைந்து வந்துள்ளது. இதேவேளை, கடந்த அண்மைக் காலத்தில் வேலைவாய்ப்பின் ஏனைய பலதரப்பட்ட துறைகளில் வாய்ப்புக்களை ஆராய்வதற்கு இலங்கை ஆரம்பித்துள்ளது. உலக சந்தையில் இத் துறைகளுக்கு தொழிலாளர்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்களுக்கு வழிவகுக்கும் கட்டடவாக்கத்துறையில் தொழில் பயிலுனர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் மற்றும் விருந்தோம்பல் வர்த்தகத்தில் இதே மாதிரியான பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, பணிப்பெண்கள் தவிர்ந்த தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் வகைகளிலான குடிபெயர்ந்த தொழிற்படை 2006இன் 42 சதவீதத்திலிருந்து 2007இல் 47 சதவீதத்துக்கு அதிகரித்தது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**பொதுவான தொழிலாளர் உற்பத்தித் திறன், கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட போக்கைப் பின்பற்றி 2007இல் தொடர்ந்து முன்னேற்றமடைந்தது.** இது, நிலையான (2002) விலைகளில் மொ.உ.உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி கூட்டல் நியதிகளில், வடக்கு மற்றும்

**அட்டவணை 4.14 — நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்**

| நாடு | 2006 | | 2007 (அ) | | மாற்றம் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| கட்டார் | 31,458 | 15.6 | 38,728 | 17.8 | 7,270 | 23.1 |
| சவுதி அரேபியா | 61,423 | 30.4 | 60,218 | 27.7 | -1,205 | -2.0 |
| ஐ.அ.இ | 33,600 | 16.6 | 38,315 | 17.6 | 4,715 | 14.0 |
| குவைத் | 34,697 | 17.2 | 40,883 | 18.8 | 6,186 | 17.8 |
| ஏனையவை | 40,770 | 20.2 | 39,162 | 18.0 | -1,608 | -3.9 |
| **மொத்தம்** | **201,948** | **100.0** | **217,306** | **100.0** | **15,358** | **7.6** |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**அட்டவணை 4.15 — முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தியாக்கம்**

| | 2005 | 2006 | 2007(அ) |
|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (2002)** | | | |
| **மொ.உ.உ ரூ.மில்லியன்** | 1,941,671 | 2,090,548 | 2,232,387 |
| வேளாண்மை | 241,851 | 257,131 | 265,586 |
| கைத்தொழில் | 545,981 | 590,298 | 635,199 |
| பணிகள் | 1,153,839 | 1,243,119 | 1,331,602 |
| **தொழிலாளர் உற்பத்தியாக்கம்** | | | |
| **ரூ.'000 ஆளுக்கு** | 286.0 | 294.2 | 317.0 |
| வேளாண்மை | 117.5 | 112.4 | 120.6 |
| கைத்தொழில் | 305.5 | 312.3 | 339.0 |
| பணிகள் | 392.3 | 424.6 | 449.0 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.16** **தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்**

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனையவை(அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2004 | 44 | 15,832 | 40,779 | 46 | 17,514 | 40,321 | 90 | 33,346 | 81,100 |
| 2005 | 17 | 4,283 | 8,370 | 40 | 49,282 | 149,982 | 57 | 53,565 | 158,352 |
| 2006 | 19 | 196,520 | 4,821,394 | 34 | 13,283 | 72,513 | 53 | 209,803 | 4,893,907 |
| 1ஆம் காலாண்டு | 8 | 1,973 | 4,360 | 9 | 3,726 | 46,368 | 17 | 5,699 | 50,728 |
| 2ஆம் காலாண்டு | 3 | 1,463 | 2,593 | 7 | 4,166 | 10,932 | 10 | 5,629 | 13,525 |
| 3ஆம் காலாண்டு | 6 | 1,805 | 7,645 | 8 | 1,719 | 7,949 | 14 | 3,524 | 15,594 |
| 4ஆம் காலாண்டு | 2 | 191,279 | 4,806,796 | 10 | 3,672 | 7,264 | 12 | 194,951 | 4,814,060 |
| 2007 (ஆ) | 9 | 1,468 | 6,089 | 16 | 5,948 | 98,417 | 25 | 7,416 | 104,506 |
| 1ஆம் காலாண்டு | 1 | 52 | 260 | 5 | 1,485 | 1,945 | 6 | 1,537 | 2,205 |
| 2ஆம் காலாண்டு | 1 | 233 | 233 | 5 | 2,267 | 20,384 | 6 | 2,500 | 20,617 |
| 3ஆம் காலாண்டு | 2 | 323 | 969 | 3 | 1,549 | 73,318 | 5 | 1,872 | 74,287 |
| 4ஆம் காலாண்டு | 5 | 860 | 4,627 | 3 | 647 | 2,770 | 8 | 1,507 | 7,397 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம் : தொழில் திணைக்களம்

கிழக்கு மாகாணங்களுக்காக சீராக்கப்பட்ட தொழில்நிலை எண்ணிக்கையின் அடிப்படையில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஊழியர் ஒருவருக்கு ரூ.317,000இற்கு கிட்டத்தட்ட 7.7 சதவீதத்தால் அதிகரித்தது. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 2007இல் பொதுவான உற்பத்தித் திறனில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது. வேளாண்மைத்துறை 2006இன் 4.3 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் உற்பத்தித்திறனில் 7.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தொழிலாளர் உற்பத்தித் திறனின் தொடர்ச்சியான அதிகரிப்பு தொழில் வாய்ப்பின்மையைக் குறைக்கும் அதேவேளை, உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கான சாதகமான அபிவிருத்தியாகும். இது, ஏனைய காரணிகளிலிருந்து எழும் பணவீக்க அழுத்தங்களையும் கட்டுப்படுத்த உதவும்.

## தொழில் உறவுகள் மற்றும் தொழிற் சந்தைச் சீர்திருத்தங்கள்

**2004 இலிருந்து வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட உறுதியான வீழ்ச்சி 2007இலும் தொடர்ந்ததுடன், 2006இன் 53 வேலை நிறுத்தங்களுடன் ஒப்பிடுகையில் 2007இல் 25 வேலை நிறுத்தங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன.** பெருந்தோட்டத்துறைக் கைத்தொழிலில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2006இன் 19 உடன் ஒப்பிடுகையில் 2007இல் 9இற்கு வீழ்ச்சியடைந்தது. இழக்கப்பட்ட மொத்த மனித நாட்களும், பங்கேற்ற தொழிலாளர் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. ஏனைய தனியார் துறையிலும் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2006இன் 34 இலிருந்து 2007இல் 16 இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இத்துறையில் பங்கேற்ற தொழிலாளரின் எண்ணிக்கை 55 சதவீதத்துக்கும் கூடுதலாக வீழ்ச்சியடைந்தபோதிலும் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் 36 சதவீதத்தால் அதிகரித்தன. இது பெரும்பாலும் செவனகல சீனிக் கம்பனியில் 20 நாட்கள் வேலை நிறுத்தப்பட்டமை மற்றும் சில ஆடைத் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்களால் ஏற்பட்டது.

**உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு சிறந்த பணியாற்றும் சூழலை உருவாக்குவதற்கு தொழிற் சந்தையில் மேலும் சீர்திருத்தங்களை மேற் கொள்ளுமாறு தனியார்துறை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.** அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழில் சீர்திருத்தங்களின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலில் பங்கேற்பதற்காக முத்தரப்புப் பங்காளர்களையும் (தொழில்தருநர்கள், ஊழியர்கள் மற்றும் அரசு) பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக கைத்தொழில் இணக்கப்பாடு இவ்வாண்டு முழுவதிலும் நிலவியதால் 2007இல் புதிய தொழிற் சந்தை சீர்திருத்தங்களுக்கான தேவை ஏற்படவில்லை.

## 4.5 கொள்கைகளும் பிரச்சனைகளும்

**படித்த இளைஞரிடையே தொழில் வாய்ப்பின்மை ஒப்பீட்டு ரீதியில் உயர்வீதங்களில் தொடர்ந்து காணப்பட்டமை மற்றும் ஆங்கிலப் புலமையும் ஆளுமை விருத்தியுடன் கூடிய தேர்ச்சியைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப தகைமை பெற்ற ஆளணியினர் பற்றாக்குறையாகவுள்ளமை, வழங்கல் மற்றும் கேள்விகளுக் கிடையேயான பொருத்தமற்ற தன்மையை எடுத்துக் காட்டுகிறது.** எனவே, கல்வி முறையில் காணப்படும் குறைபாடுகள் மேலும் திருத்தியமைக்கப்பட வேண்டும். உள்நாடு மற்றும் பன்னாட்டு தொழிற் சந்தைகளில் மாற்றமடைந்துவரும் நிலைமைகளை எதிர்கொள்வதற்கான தேர்ச்சி விருத்திகளுக்கான பயன்தரும் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களுடன் கல்விச் சீர்திருத்தங்களுக்கான தேவை பரந்தளவில் கலந்தாலோசிக்கப்பட்டு இணக்கம் காணப்பட்ட போதிலும் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது.

**கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரேபிய இராச்சியம் மற்றும் குவைத் நாடுகளில் அதிக எண்ணிக்கையான தேர்ச்சியடைந்த தொழிலாளர்களை தொழிலுக்கமர்த்தியதன் மூலம் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களால் அனுப்பப்படும் பணவனுப்பல்கள் இலங்கையில் சென்மதி நிலுவைகளை முன்னேற்றுவதற்கு தொடர்ந்து உதவுகிறது.** இலங்கை தற்போதும் மத்திய கிழக்கில் பெரும்பாலும் குறைந்த கேள்வியைக் கொண்ட தேர்ச்சியற்ற தொழிலாளர்களை

அனுப்புகின்றபோதிலும் இந்நாடுகளில் தொழில்சார் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வி, கணிய அளவையாளர்கள், தச்சர்கள் மற்றும் கொத்தனார்கள் போன்ற கட்டடவாக்கத் தொழிலாளர்களுக்கான கூடியளவான வேலை வாய்ப்புக்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கனடா மற்றும் யப்பான் போன்ற ஏனைய நாடுகளில் தாதிகள் மற்றும் நலக் கவனிப்பாளர்களுக்கு அதிகரித்துச் செல்லும் வாய்ப்புக்கள் காணப்படுவதால் இச் சந்தைகளுக்கு அனுப்பும் ஆளணிகளின் பயிற்சி அதிகரிக்கப்பட வேண்டும். இது வெளிநாட்டு வேலைகளுக்கு மத்திய கிழக்கில் தங்கியிருத்தலைக் குறைத்து கூடிய வெளிநாட்டுத் தொழில் மற்றும் வெளிநாட்டு செலாவணி அனுப்பல்களுக்கு இட்டுச் செல்லும்.

## சிறப்புக் குறிப்பு 11

## பண்டப் பரிமாற்றுச்சந்தையின் உருவாக்கமும் அதன் நன்மைகளும்

வேளாண்மைப் பண்டங்களின் விலைத்தளம்பல்கள் வேளாண்மையாளர்களால் மட்டுமன்றி விவசாயச் செய்முறையாளர்கள் மற்றும் விவசாயப் பெறுமதி சேர்ப்பில் ஈடுபடும் ஏனைய முயற்சியாளர்களாலும் ஓர் பிரச்சனையாக அறியப்பட்டுள்ளது. குறிப்பாக, சேமித்து வைத்திருக்கும் இயலளவை கொண்டிராத விவசாயிகள் அறுவடைக் காலப்பகுதியில் நிலவுகின்ற குறைந்த விலைகளில் அவர்களது அறுவடைகளை விற்க வேண்டியதாயிருக்கின்றது. அறுவடைக் காலங்கள் மற்றும் அறுவடையற்ற காலங்களுக்கிடையில் விவசாய பண்டங்களின் பரந்தளவான விலைத்தளம்பல்களின் ஓர் தொடர்ச்சியான பிரச்சனைக்கான தீர்வாக 1999இல் மத்திய வங்கியால் விவசாய பண்டங்களின் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஓர் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தில் ஒரு உற்பத்தியாளர் மற்றும் கொள்வனவாளர் ஒரு பண்டத்தின் ஓர் குறிப்பிட்ட தொகையினை முன்கூட்டியே தீர்மானித்த ஓர் விலையில் முறையே கொள்வனவு செய்ய அல்லது விற்பனை செய்ய உடன்பட்டுக் கொள்வதாகும். அத்தகைய ஓர் ஒப்பந்தத்தில் தொகை, தரம், விநியோகத்திகதி மற்றும் விலை என்பனவற்றின் சொற்பதங்கள் விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர்களுக்கிடையில் உடன்பட்டு ஒவ்வொரு தனியான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருந்த போதும் கொடுக்கல்வாங்கல்கள் நடைபெறுகின்ற நேரத்தில் நிலவுகின்ற திறந்த சந்தை விலைகளிலிருந்து கொள்வனவாளர்களால் அல்லது விற்பனையாளர்களால் உடன்பட்டுக் கொண்ட விலைகள் குறிப்பிடத்தக்களவால் விலகியிருக்கும் சந்தர்ப்பத்தில், இணங்கப்பட்ட விலைகளில் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு அத்தரப்பினர்களின் ஒரு பகுதியின் தயக்கமுடையவர்களாக இருப்பார்கள். இலங்கையில் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் செய்த தரப்பினர்கள் இணக்கப்பாட்டு விலை ஒன்றிற்கு அநேகமாக வருவதுடன் அவ்விலைகளில் கொடுக்கல்வாங்கல்கள் இடம் பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.[1]

[1] ஒப்பந்தத்தினை அமுல்படுத்துவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாமென்பது கோட்பாட்டுரீதியில் சாத்தியமானது, ஆனாலும் நாட்டில் வழக்காடலுடன் தொடர்பான நேரம் மற்றும் செலவுகளினை கருத்தில் கொண்டால் இதுவொரு நடைமுறைக்குச் சாத்தியமான தெரிவல்ல.

பல்வேறு நாடுகளில் பண்டப்பரிமாற்று சந்தை ஒன்றின் **"எதிர்வு ஒப்பந்தத்தில்"** வியாபாரம் செய்வதன் மூலம் விலை இடர்நேர்வு முகாமைத்துவம் அடையப்படுகிறது. **ஓர் பண்ட எதிர்வு ஒப்பந்தமாக** தரப்படுத்தப்பட்ட மாற்றப்படக்கூடிய முன்னோக்கிய ஒப்பந்தமாக காணப்படுகிறது. (அதாவது கீழ் கோடிட்ட சொத்தின் தொகை, தரம் மற்றும் விநியோகத்திகதி என்பன ஒரே மாதிரியாக காணப்படுகிறது.) முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் போலல்லாது **எதிர்கால ஒப்பந்தங்களில்** விநியோகம் கட்டாயமானதொன்றல்ல மற்றும் அனைத்து இடர்நேர்வுகளையம் கருத்தில் கொண்டு பரிமாற்று சந்தை இடர்நேர்வை மிதமாக்கும் பல்வேறு திட்டங்களை சேர்த்துக் கொண்டிருப்பதால் மாற்றுத்தரப்பு இடர்நேர்வுகள் எதனையும் இது கொண்டிருக்கவில்லை. பௌதீக பண்டச் சந்தையில் ஈடுபடாத ஆட்கள் கூட பௌதீக சந்தையின் விலை அசைவுகள் பற்றிய அவர்களின் முன்கூட்டிய அறிவும் ஆற்றலினூடாக இலாபம் உழைக்கும் எண்ணத்துடன் ஓர் பண்டப் பரிமாற்றச் சந்தையின் வியாபாரத்தில் பங்குபற்ற முடியும். அத்தகைய பங்குபற்றுநர்கள், ஊக வணிகர்கள் என அழைக்கப்படுவதுடன் பண்ட பரிமாற்று சந்தையின் பங்குபற்றுநர்களுள் உள்ளடக்கப்படுகின்றனர்.

விலை இடர்நேர்வு முகாமைத்துவமானது பண்ட பரிமாற்று சந்தையில் எதிர்வு ஒப்பந்த வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் அடையப்பட முடியும். ஓர் இழப்பு பாதுகாப்பாளர் பௌதிக சந்தையில் முகம் கொடுக்கின்ற இடர்நேர்வை எதிர்வுச் சந்தையில் ஓர் நிலைமையினை எடுப்பதன் மூலம் மிதமாக்க முடியும். எனவே, பௌதீக சந்தையின் ஏதாவது நட்டங்கள் எதிர்வு சந்தையின் இலாபங்களால் எதிரீடு செய்யப்பட முடியும்.

*உதாரணம்: மாச்சு மாதம் அறுவடையை எதிர்பார்த்து திசெம்பரில் நெல்லை விதைக்கின்ற ஓர் விவசாயி, அறுவடைக் காலங்களில் விலைகள் அதிகளவில் வீழ்ச்சியடைவதால் ஓர் விலை இடர்நேர்வுக்கு முகம் கொடுக்கிறார். இந்தச் சூழ்நிலையில், அவரால் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது முன்னோக்கிய ஒப்பந்தங்கள் மதிக்கப்படாமல் போவதுடன் ஓர் இணக்கப்பாட்டு விலைக்கு இணங்கச் செய்ய அவர் நிர்ப்பந்திக்கப்படலாம். ஓர் பண்டப் பரிமாற்று சந்தை காணப்படுமாயின், பரிமாற்று சந்தையில் திசெம்பரில் நிலவுகின்ற விலைகளில் மாச்சு மாத நெல்லிற்கான எதிர்வுகளை விற்பதற்கு அவ்விவசாயியை இயலச் செய்யும் (மெ.தொன் ஒன்று ரூ.20,000 என்போம்). இரு சந்தைகளின்*

*விலைகளும் ஒன்றுடன் ஒன்று எழுமாற்றாக அசைவதால் பௌதீக சந்தையில் விலைகள் வீழ்ச்சியடையும். எனவே, விவசாயியால் மாச்சு நெல் எதிர்வுகளை ஓர் குறைந்த விலையில் (மெ.தொன் ஒன்று ரூ.17,000 என்போம்) வாங்கக்கூடியதாக இருப்பதால், எதிர்காலச் சந்தையில் அவருடைய நிலைமையை சமப்படுத்துவதன் மூலம் ஓர் இலாபத்தை அடைந்து கொள்ள முடியும். மேலும், பௌதிக சந்தையில் ஏற்பட்ட நட்டத்தை எதிர்வுகள் சந்தையில் சம்பாதித்த இலாபத்தினால் எதிரீடு செய்யலாம்.*

எப்படியாயினும் நடைமுறையில், பரிமாற்று சந்தையில் நேரடியாக வணிகம் செய்யக்கூடிய ஓர் நிலையில் மிகப் பெரிய விவசாயிகள் மாத்திரமே காணப்படமுடியும். போதுமானளவு மூலதனத்தை கொண்ட விவசாய கூட்டுறவுகள் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திக் கட்டமைப்புகள் இப்பரிமாற்று சந்தையில் நேரடியாக வணிகம் செய்ய முடியும். அவர்களுடைய விலை இடர்நேர்வு இழப்பை பாதுகாக்கும் பொருட்டு உற்பத்தி கொள்வனவாளருக்கு இயல முடிவதைப் போல் சிறிய விவசாயிகளும் நன்மை அடைய முடிவதுடன் விவசாயிகளுக்கு ஓர் சிறந்த விலையை முன் வைக்கவும் விருப்பப்படலாம்.

பண்டப்பரிமாற்று சந்தை பல்வேறு நன்மைகளை கொண்டு வந்துள்ளது. உதாரணமாக விலைகள் பாதுகாக்கப்படக்கூடிய இயலுமையை கொண்டிருப்பதால் வியாபார செய்முறைகள் தொழில்துறை குறைந்த இடர்நேர்வை கொண்டிருக்கும். இத்தகைய துறையினரால் கொடுகடனுக்கு அணுகக்கூடியதாயிருப்பது நுகர்வோர்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தில் வேறுபட்ட துறைகளுக்காக விசாலமான நன்மைகளைக் கொண்டுவரும். மேலும், பண்டப்பரிமாற்று சந்தையில் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களால் நடைமுறையில் நிலவுகின்ற சந்தை தகவல், வல்லுனர்களின் அபிப்பிராயம், கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகள், அரச கொள்கைகள், பணவீக்க விகிதங்கள், காலநிலை எதிர்வுகூறல்கள், சந்தை இயக்கவாற்றல் மற்றும் எதிர்பார்த்தல்கள் மற்றும் பீதிகள் ஆகிய அனைத்து தகவல்களையும் ஓர் தொடர்ச்சியான விளைவு வெளிப்படுத்தல் பொறிமுறையினூடாக கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வணிகங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து புதிய தகவல்களும் ஓர் தனியான இலக்கமாக மாற்றப்படுவதுடன் இவையே கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களால் இணங்கப்பட்ட சந்தை விலையாக காணப்படுகின்றது. இந்த விலை எங்கும் பரவாலாக்கப்பட்டிருப்பதனால் சந்தைகள் அதிகம் ஒன்றிணைக்கப்பட்டவையாக உருவெடுத்துள்ளன. மேலும் பரிமாற்றுச் சந்தையில் வரையறுக்கப்படுகின்ற எதிர்கால விலைகளை பார்வையிடுவதால், இதில் ஈடுபடும் தரப்பினரால் விலை விருத்திகளை மதிப்பிட்டுக் கொள்ள முடியும், குறிப்பாக தேடல் கிரயங்கள் பூச்சியமாக இருக்கும். பண்டபரிமாற்றுச் சந்தையில் நிலவுகின்ற எதிர்வு விளைவுகள் எதிர்காலத்தில் நிலவுக்கூடிய விலைகளுடைய நல்ல குறிகாட்டியாக காணப்படுவதால், விவசாயிகளால் விதைக்கப்பட வேண்டிய பயிரினைப் பற்றிய முடிவினை எடுக்கப்பட முடியும்.

ஓர் பரிமாற்று சந்தையில் வியாபாரம் செய்வதால் ஏற்றுமதி போட்டித்தன்மையினையும் விருத்தி செய்ய முடியும். ஏற்றுமதியாளர்கள் ஒப்பந்தங்களை முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. அத்துடன், ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்ற நேரத்தில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் பௌதீக சந்தையில் அதிகரிக்குமாயின் ஓர் இடர்நேர்வை வெளிப்படுத்தி நிற்கும். முன்கூட்டியே பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் இந்த இடர்நேர்வை தவிர்க்க முனைவதானால், மூலதனம் முடக்கப்படுவதுடன் ஓர் களஞ்சியப்படுத்தல் கிரயமும் ஏற்படும். இத்தகைய கிரயங்கள் ஏற்றுமதியாளரால் குறிப்பிடும் விலைகளினுள் உள்ளடக்கப்பட வேண்டியு மிருக்கும். ஓர் பௌதீக சந்தை கொடுக்கல்வாங்கல்களுக்கு ஓர் எதிர்வு சந்தை கொடுக்கல்வாங்கலை (எதிர்வு கொள்வனவு) பிரதியீடு செய்வதன் மூலம் விலை இடர்நேர்வு குறைக்கப்பட முடிவதுடன் வெளிநாட்டு கொள்வனவாளருக்கு அதிக போட்டித்தன்மை வாய்ந்த விலையினை பட்டியலிட முடியும். (எதிர்வு சந்தையில் ஓர் நிலையினை எடுப்பதற்கு ஒப்பந்தப் பெறுமதியின் ஒரு சிறிய அளவினையே ஒதுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே ஓர் சிறிய பகுதி மூலதனத்தையே முடக்க வேண்டியிருக்கும் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.) மேலும், பண்டப்பரிமாற்றுச் சந்தையில் அத்தகைய பண்டங்களின் ஒப்பந்த வணிகம் நடைபெறுமாயின், குறிப்பிட்ட பகுதியின் பௌதிக சந்தையில் பண்டங்களின் தரங்கள் விருத்தியடையும். இது, ஏனென்றால் ஓர் பண்ட பரிமாற்று சந்தையில் நிகழ்கின்ற கீழ் கோடிட்ட பண்டங்களுடைய தரப்படுத்தல் தரங்களுடைய நியமங்கள் பற்றிய உயர்ந்த விழிப்புணர்வுகளை உருவாக்கு-வதனாலாகும். மேலும், அதிக வினைத்திறனான விலை இழப்பு பாதுகாப்பிற்காக, பண்டப்பரிமாற்று சந்தையில் வியாபாரம் செய்யப்படும் ஒப்பந்தங்களின் பண்டங்களுடைய தரப்பினால் தரங்களுக்கு எதிராக அளவுமட்ட குறியிற்கு, பௌதீக சந்தையில் வியாபாரம் செய்யப்படும் பண்டங்களுடைய தரங்கள் அவசியமாக இருக்கின்றது. அத்தகைய ஓர் சூழ்நிலையில், பண்டபரிமாற்று சந்தையில் வியாபாரம் செய்யப்படும் ஒப்பந்தங்களின் தரப்படுத்தல் தரம்.·. தரங்களுக்கு இணையான தரமுடைய பண்டங்களுக்கான கேள்வியை உயர்த்துவதுடன் பண்டங்களுடைய தரங்களில் ஒட்டுமொத்த விருத்தியினைக் கொண்டு வருகின்றது.

பண்டப் பரிமாற்று சந்தை ஒன்றிலிருந்தான திரட்டிய நன்மைகளின் அளவானது, சந்தைகளின் கட்டமைப்பு, ஓர் நாட்டினுடைய பண்ட சந்தையில் வணிகம் செய்யப்படும் ஓர் பண்டங்களுடைய முக்கியத்துவம் வாய்ந்த பொதுமக்கள் மற்றும் நிலவுகின்ற ஒழுங்குபடுத்தல் முறைமை என்பவற்றில் தங்கியிருத்தல் அவசியமாகின்றது. உதாரணமாக இந்திய

நாட்டில் ஓர் பிரதான உற்பத்திக்காக பல்வேறு பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் இதனுடைய பண்டச் சந்தைகள் சீர்குலைத்தது மற்றும் சந்தை புரள்வுகளுக்கும் வியாபார ஒழுங்குபடுத்தல்களுக்கு உட்பட்டு இருந்த அதேநேரம் நாட்டின் விவசாய உற்பத்திகள் தொடர்பான பெறுமதிச் சங்கிலி மிகவும் நீண்டதாகவிருந்தது. இச் சூழ்நிலையில் சந்தையின் ஒன்றிணைவு, விலை வெளிகாட்டல்களின் உறுதி, விவசாயிகளுக்கான இலாபம் என்பன உள்ளடங்கலாக பரிமாற்று சந்தைகளுடைய உருவாக்கத்திலிருந்து பரந்தளவிலான நன்மைகள் பெறப்பட்டிருந்தன. அதேநேரம் இலங்கையில் வியாபாரம் செய்யப்படும் பண்டங்களுடைய தொகை ஒப்பீட்டளவில் சிறியதாக இருப்பதுடன், பல்வேறு பெரிய பண்டங்களுடைய குறிப்பிடத்தக்க தொகைகள் இறக்குமதி செய்யப்பட்டதாக வுள்ளதுடன், இத்தகைய பண்டங்களுக்கான விலை வெளிப்படுத்தல்கள் வெளிநாட்டிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அதிக பண்டங்களுடன் தொடர்புடைய பெறுமதிச் சங்கிலி இலங்கையின் தொடர்பான அழுத்தத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.

இலங்கையில் ஓர் பண்டப்பரிமாற்று சந்தையை நிறுவுவதற்கான ஓர் முக்கியமான முதற் தேவைப்பாடாக, பொருத்தமான ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகளுடன் கூடிய சட்டக் கட்டமைப்பை இயலச் செய்யும் ஒன்றினுடைய உருவாக்கமாக இருக்கிறது. பண்டப்பரிமாற்று சந்தையில் ஏற்படும் ஏதாவது தவறாகக் கையாளுதல் அல்லது விரும்பத்தகாத எதிர்வுகூறல்களுடைய பொருளாதார விளைவுகள் ஏனையவற்றில் ஏற்படுவதை காட்டிலும் உதாரணமாக பங்குச் சந்தையில் ஏற்படுகின்ற மோசடியை காட்டிலும் அதிக பாதிப்பான அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும். பண்ட பரிமாற்று சந்தையானது பெரிய அளவிலான பங்குபற்றுநர்களை கவர்வதால் இதனுடைய நம்பகத்தன்மை முக்கியமுடையதாக இருக்கின்றது. அத்துடன் இது, சந்தேகத்துக்கிடமற்ற நம்பிக்கையை உடைய ஆட்கள் மற்றும் நிறுவனங்களால் அமைக்கப்பட வேண்டும். எனவே நம்பிக்கை வாய்ந்த வியாபார கூட்டமைப்புக்கள் அல்லது வங்கிகள் போன்ற நிறுவனங்கள் இத்தகைய நோக்கத்திற்காக முன் வரவேண்டும். பண்டப்பரிமாற்று சந்தைக்கு, ஏனைய நுட்பங்களுக்கு மேலதிகமாக பண்டங்களுடைய பௌதீக விநியோகங்களுக்கு உதவுதல் மற்றும் ஒழுங்குபடுத்தும் விசேட நுட்பம் மற்றும் அறிவை கொண்டுள்ள நுட்பம் வாய்ந்த ஆட்களை ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும். பண்ட பரிமாற்று சந்தையை நிறுவுவதற்கு முன்னர் ஒழுங்கமைக்கப்பட்ட பண்டகசாலைக் கட்டமைப்பு மற்றும் ஆராய்ந்து பார்க்கும் வசதிகள் போன்ற ஏனைய சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பை கொண்டிருத்தல் முக்கியமானதாக காணப்படுகின்றது.